விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 16 ரபியுல் 29 இதழ் 294

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 2-12-1986

## பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் விரிவுரையாளர்கள் உட்பட 60 சிங்களவர் தடுப்புகாவலில்

கொழும்பு, திங்கள்

மனித உரிமைஸ்தாபனங்களின் உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள் உட்பட சுமார் 60 சிங்களவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இவர்கள் வடபகுதி தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளனராம்.

மேலும் பல்கலைக்கழகவிரிவுரையாளர்கள் உட்பட பலசிங்களவர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும், இவர்கள் பற்றிய விபரங்கள் இன்டர்போல் நிறுவனத்துக்கும், சர்வதேச விமானநிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அரச அதிகாரி ஒருவர் இதுபற்றிக் கூறுகையில் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டோரில் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பெண் விரிவுரை

(5ம் பக்கம் பார்க்க)

● படையினர் கைதுசெய்த அரச, கூட்டுத்தாபன ஊழியர்களில்

# பத்துப் பேர் சுட்டுக் கொலை; எட்டுப் பேரைக் காணவில்லை

## மட்டு. தொழிற்சங்க சம்மேளனம் இணைப்பதிகாரியிடம் புகார்

(கொழும்பு)

**மட்டு. மாவட்டத்தில் அரசபடையினரால் கைது செய்யப்பட்ட அரச கூட்டுத்தாபன ஊழியர்களில் பத்துப்பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். எட்டுப்பேர் காணமல் போயுள்ளனர். இருபதுபேர் மட்டுமே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். மேலும் கைதாவோர் படுமோசமான சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர்.**

மட்டக்களப்பு இராணுவ இணைப்பதிகாரி எம். எஸ். சில்வாவை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய மட்டு மாவட்ட தொழிற்சங்க சம்மேளனத் தூதுக்குழு இவ்வாறு பேச்சுவார்த்தையின் போது தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க முன்னாள் தலைவர் பி. எஸ். வஙசிங்கா தலைமையில் சென்ற இத் தூதுக்குழுவில் ஒரு பெண்மணி உட்பட ஆறு பேர் அங்கம்வகித்தனர்.

இக்குழுவினர் கல்லடி அதிரடிப்படை முகாமில் மேற்கொண்ட இச் சந்திப்பின் போது மட்டு மாவட்டத்தில் அரசகூட்டுத்தாபன ஊழியர்கள் படையினரால் கைதுசெய்யப்படுவதுடன் முகாமகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டு மனிதாபிமானமற்ற முறையில சித்திரவதை செய்யப்படுகின்றனரென எடுத்துக் கூறியுள்ளனர்.

அவர்கள் மேலும் கூறியதாவது: படையினரால் கைது செய்யப்படுவோர் தலைகீழாக தொங்கவிடப்பட்டு மிளகாய்ப்புகை முகத்தில் பிடிக்கப்படுவதுடன் உயிர்நிலை உறுப்புக்களில் எஸ்லானைப் போன்றவற்றால் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். இதேவேளை வேறு பலபொதுமக்களும் இவ்வாறன சித்திரவதைகளுக்குள்ளாகப்படுகின்றனர்

பயங்கரவாத சந்தேகநபர்

(5-ம் பக்கம் பார்க்க)

## கொட்டும்மழையிலும்ரோந்து

(கொழும்பு)

நேற்று மட்டக்களப்பில் 24 மணி நேரமும் பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. எனினும் அதிரடிப்படையினர் இந்தக் கொட்டும் மழையிலும் தமது ரோந்து நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

## மோட்டார் சைக்கிள் கொள்ளைக்கும் ,எமக்கும் எதுவித சம்பந்தமுமில்லை — ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், செவ்

கடந்த சில தினங்களாக பச்சைநிற வான்களில் வந்தவர்களின் மோட்டார் சைக்கிள் கடத்தல்களுக்கும் தமது இயக்கத்துக்கும் எதுவித சம்பந்தமுமில்லையென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக இவ்வியக்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் உரும்பிராய் எரிபொருள் நிரப்பு நிலையத்

(5ம் பக்கம் பார்க்க)

## இராணுவபலத்தை அதிகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்

வடபகுதியில் இராணுவ பலத்தை மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது

இந்த நடவடிக்கைகளை உறுதிப் படுத்தும்வகையில் காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து ஏராளமாக இறக்கப்பட்ட முள்ளுக்கம்பிசுள், சாக்குகள், கூடாரம் அடிக்கும் சீலைகள் போன்றவை லொறிகள் மூலம் பலாலி இராணுவமுகாதுற்குகொண்டு செல்லபட்டுள்ளது

இராணுவத்தினரின் இந்நடவடிக்கைகள் மேலும் மினி முகாம்கள் அமைக்கப்படலாம் என்ற அச்சத்தை மக்கள் பத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

[வா]

மலையகத் தோட்டங்களில்

## சிங்களவர் குடியேற்றமும் தமிழர்களுக்கு வேலை மறுப்பும்

நுவரெலியா, திங்கள்

நுவரெலியா - மஸ்கெலியா தொகுதிகளிலுள்ள அரச தோட்டங்களில், அத்தோட்டங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர் - யுவதிகளுக்கு வேலை வழங்குவது மறுக்கப்பட்டுவருவதாகவும், அந்த டங்களுக்குச் சிங்களவர்கள் அமர்த்தப்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது

சில தோட்டங்களில் சிங்கள

[5ம் பக்கம் பார்க்க]

## ரயில் பிரயாணிகளுடன் வந்த மினி வான் புரண்டு ஒருவர் பலி; 10 பேர் காயம்

[வவனியா]

வவனியாவிலிருந்து ரயில் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த தனியார் மினி வான் ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியதில் பிரயாணி ஒருவர் பலியானார். மேலும் பத்து பேர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்

நேற்றுக்காலை 11-30 மணியளவில் நொச்சிமோட்டை என்ற இடத்தில் இவ்விபத்து இடம்பெற்றது இவ்விபத்தில்

(5-ம் பக்கம் பார்க்க)

## "சூளைமேட்டுச் சம்பவம் பொலிஸாரின் சூழ்ச்சி" —தி மு க. எம். பி.

சென்னை, டிச 1

சென்னை சூளைமேட்டில் கடந்த மாதம் 1ம திகதியன்று இடம்பெற்றதுப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பொலிசாரின் சூழ்ச்சியே என ராஜ்யசபையைச் சேர்ந்த தி மு க உறுப்பினர் ஒருவர் குற்றம்சாட்டியுள்ளார்

இந்தியப்பத்திரிகையான 'சண்டேமெயில்'க்கு அளித்த பேட்டியிலேயே அவர் இக்குற்றச் சாட்டைத் தெரிவித்தார்.

இத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இரு பொதுமக்கள் பலியாகியது தெரிந்ததே.

புதுடில்லி நகரில்

## வேகமாககாரைஓட்டிய'ராஜீவ்' பொலிசாரால் தடுக்கப்பட்டார்

கொழும்பு, திங்கள்

புதுடில்லி வீதியொன்றில் மிக வேகமாகச் சென்ற இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியின் புதிய யோஸிடர்ஸ் பென்ஸ் காரை வீதிப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பொலிஸ் ஒருவர் தடுத்து நிறுத்தினார்

அண்மையில் நடைபெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

பிரதமர் ராஜீவுக்குப் பாதுகாப்பிற்குச் சென்ற மற்றைய

[5ம் பக்கம் பார்க்க]

## சென்னை 'தூதர்' ஓய்வு

கொழும்பு. திங்கள்

சென்னையிலுள்ள இலங்கை பிரதி தூதரகத்தின் தூதுவர் திரு. திஸ்ஸஜயக்கொடி விரைவில் சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

இவர்கடந்தாண்டுமேமாதம் முதல் இப்பதவியை வகித்து வருகின்றார், [ஊ]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

6 மாத நல்ல இன அல்சேசியன் பெண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: 18, கொண்டலடி லேன், நல்லூர். [C 6090]

சண்டி வீதி, பளையில், தம்பகாமம் ரோட்டில் 150 யாரில் 30 பரப்புத் தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: பயூரா றேடிங் சென்ரர், கண்டி வீதி, பளை, [C 6094]

(New Typewriters) தட்டச்சு இயந்திரங்கள் Portables-Optima, Olympia, Silverreed மற்றும் ஆங்கிலம்- தமிழ் Standards உடன் விற்பனைக்கு. Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C 6084)

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கஸெட் (1) வாரியார் முன்னுரையுடன் திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி - சுலோசனா சீதாமணி, வைதேகி, தருமபுரம் சுவாமிநாதன் (2) பிள்ளையார் கதை. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம், கஸ்தூரி ரேட் சென்ரர், சுன்னாகம். C 6 04

நீரிழிவு வியாதிகளுக்கு உகந்த வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்பட்ட கோதுமை அரிசி குறுணல் விற்பனைக்குண்டு M G M 777 K K S Road and 208 1st Cross St Jaffna ரெலிபோன்: 22611. (C 5066)

Nissan Caravan Passenger Van தொடர்பு: கொம்சட் கொமினிசேஷன் 791/1 பருத்தித்துறை வீதி கல்வியங்காடு தொலைபேசி: 22766 வாகனத்தை காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பார்வையிடலாம்) C 6125

## தேவை

அனுபவமும் திறமைமுமுடைய வேலைத்மன் தேவை உடன் நேரில் வரவும். திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும் விபரங்களுக்கு: தொடர்பு: ஹரன் இண்டஸ்ரீஸ் ராச வீதி, அச்சுவேலி. C 6109

உதவிபெண் மருந்து விற்பனையாளர்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களும், மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது 2ம், 3ம், 4ம் திகதிகளில் 12-00 noon 1-00 p m வரையில் நேரில் சந்திக்கவும். மெடிக்கல் ஹோல் இல. 224 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். C 6107

## வாடகைக்கு

இந்தியா சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனைகள் வாடகைக்கு பெற்றுக்கொள்ள கனகசபை தர்மகுலசிங்கம் கருங்காலி, காரைநகர். C 6106

## தவறிவிட்டது

ஆ. சுந்தரராஜா (செளந்தரராஜன்) வேலணை மேற்கு என்பவருடைய 580861610V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை பிறவுண் நிற பேர்சுடன் 24-11-86 ஊர்காவற்றுறை யாழ்ப்பாண பிரயாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல: 65 ஆஸ்பத்திரி வீதியிலுள்ள (சத்திரச் சந்தி) T R P ஏஜன்சியில் கொடுத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். C 6110

## வகுப்புக்கள்

English Assistant Teachers பரீட்சை 20, மீட்டல் வகுப்புகள் கடந்த கால வினாத்தாளுடனும் மேலும் பயிற்சிப் புத்தகங்களுடனும் ஆரம்பம்: 8-12-86 காலை 10 - 11/30 வரை S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். C 6114

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் அ.சயந்தன்

புங்குடுதீவு ந. அருட்கண்ணன் - மனோரஞ்சிதம் தம்பதிகளின் பிள்ளைக் கனியமுதாய்ப் பிறந்த செல்வன் சயந்தனின் முதலாவது பிறந்ததினம் (02-12-86) இன்று நல்லைக் கந்தன் திருவருட்துணையுடன் நாளும் பொழுதும் நலமுடன் வளர்ந்து, வாழ்ந்து சிறக்க வாழ்த்துகிறார்கள்.

அப்பா, அம்மா, சாமி அப்பா, தாத்தா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், சித்திசிவகலை, தியாகுத்தாத்தா, கிளிப்பாட்டி, மச்சான்மார்: பாபு, நேரு, வதனன், இளங்கோ, அகி, அரன். மச்சாள்மார்: பபி, பபா, சுபா, தேனி, குட்டி, கௌரி, லதா, அபி, அக்கா துஷ்யந்தி, தங்கை நிஷாந்தி, பீட்டிமாரும், உற்றார் உறவினர்களும்.

"வாழ்க பல்லாண்டு, வாழ்க பல்லாண்டு, வாழ்க பல்லாயிரத் தாண்டு".

171/10, கோவில் வீதி, நல்லூர். (C 6067)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கொழும்புத்துறை 10, இலந்தைக்குளம் தெரு நாகமுத்து தெய்வேந்திரம் மரணசாதனம் விடயமாக.

மரணமெய்தியவர்.

இல. T. 3993

நாகமுத்து கந்தசாமி, அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

மனுதாரர்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணச்சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு மரணசாதனத்தை ஏற்று மரணசாதனப்பிரதி அணைத்த நிர்வாகத் தத்துவப் பத்திரம் வழங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

தயாரிப்பு:

எம். கே. சுப்பிரமணியம்,
மனுதாரர் சட்டத்தரணி.

31-10-86

காரணம் காட்டும் திகதி 19-12-86க்கு நீடிக்கப்பட்டது.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

(C 6057)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

வலி கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்
அச்சுவேலி

## வெற்றுச் சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட சுமார் 7000 (ஏழாயிரம்) வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு விண்ணப்பிக்க விரும்புவோர் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100-/ம், மீளத்தகாத பணமாக ரூபா 5/-ம் சங்கக்காரியாலயத்தில் 10-12-86ந் திகதிக்கு முன்னர் கட்டி விண்ணப்பப்படிவத்தைப்பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை 15-12-86ந் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

விண்ணப்பிக்கும்போது என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம் என்று குறிப்பிடவேண்டும்.

பொது முகாமையாளர்,
வலி கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
அச்சுவேலி.
A 3173

சுன்னாகம்
பல நோ. கூ. சங்கம்,
[வரையறுகளது]
சுன்னாகம்,

## விற்பனை அறிவித்தல்

### சின்ன வெங்காயம்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் விற்பனைக்காகவும், விதைக்காகவும் பயன்படுத்தக்கூடிய பழைய சின்னவெங்காயம் (பிடிகாயாக) சுமார் 7500 கிலோ கிறும் விற்பனைக்குண்டு. தேவையானோர் வேலை நாட்களில் வெங்காயத்தைப் பார்வையிட்டு கேள்விப் பத்திரமூலம் விண்ணப்பிக்கலாம்

விண்ணப்பங்கள் 10-12-86ந் திகதிக்கு முன்னதாக 'பொது முகாமையாளர், சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், சுன்னாகம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
சுன்னாகம்
பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம். (A 3174)

## பஜனாவளி மலிவு விற்பனை

திருவெம்பாவை முடியும்வரை ரூபா 10/-க்கு நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம் கங்கா என்டர்பிறைஸ், ஸ்ரீலங்கா புத்தகசாலை, சாவகச்சேரி சிவம் மெடிக்கல் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளுங்கள்.

(C-6100)

## உளவள ஆலோசனை நிலையம்

### யாழ். நகரில் ஓர் புதிய உதயம்!

உங்கள் மனக்கவலைகளை விட்டொழியுங்கள்!
எத்தனை கோடி பணமிருந்தாலும்
நிம்மதி வேண்டும்.....................
வெளிநாட்டில் பயிற்சிபெற்ற ஆலோசகர்கள்
உங்கள் பிரச்சினைகளுக்கு பரிவாயும் அந்தரங்கமாயும்
ஆலோசனைகளை வழங்குகின்றார்கள்.

ஆலோசனை நேரங்கள் பிற்பகல்:
வியாழன் 2 30 மணிமுதல் 5-30 மணி வரை
ஞாயிறு 2-30 மணிமுதல் 5-30 மணிவரை.
மற்றைய நாட்களில் பதிவுசெய்தல் மட்டும்;
காலை 8-30 மணிமுதல் மாலை 5-30 மணிவரை.
[வெள்ளி விடுமுறை தினம்]
நாடுங்கள்;-

உளவள ஆலோசனை நிலையம்,
19/3 கொழும்புத்துறை வீதி.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

விளம்பர அமைப்பு:- ஜோ. எகட்டன்,
செனித் ADS, யாழ்ப்பாணம். (A-3168)

## வாடிக்கையாளர்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள் தோலகட்டி தயாரிப்புகளுக்கு கவனிக்க

முதலாம் திகதி டிசெம்பர் மாதம் முதல்—
கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி
பகுதிகளுக்கு
எமது மொத்த சில்லறை வியாபாரிகளாக:

**ஸ்ரீ அம்பாள் ஸ்டோர்ஸ்,**
பலாலி வீதி, திருநெல்வேலி.
என்பவர்களை நியமித்துள்ளோம் என்பதனை
பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம்:

கல்வியங்காடு கோப்பாய், இருபாலை, நல்லூர்
பகுதிகளுக்கு மொத்த சில்லறை வியாபாரிகளாக:

**சசி கோப்பி அன்ட் கூல்பார்,**
[சந்தை எதிரில்]
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்.
என்பவர்களை நியமித்துள்ளோம் என்பதனை
அறியத்தருகின்றோம்:

உங்கள் தேவைகளுக்கு அவர்களை நாடுங்கள்:

**ஜோ. எகட்டன்,**
**செனித் மார்கட்டிங்.**
19/3, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(A3167)

## சிக்மா பம்ப்ஸ் இடமாற்றம்

எமது ஸ்தாபனத்தின் விற்பனை நிலையம்

28-11-86 முதல் 533, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரான்லி வீதி, ராசாவின் தோட்டம் வீதிசந்திக்கு) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

உங்கள் சிக்மா பம்ப்ஸ் தேவைகளுக்கும்,
திருத்துதல் சேவைகளுக்கும்,

(REPAIRS AND SERVICE) எமது புதிய விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்:

**யுனைரெட் அக்றோ என்ஜினியரிங்**
533, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22747.

C 6030

# பஸ் பயணிகள் கடத்தப்பட்டு

# 24 பேர் கொலை; 8 பேர் காயம்

## பஞ்சாப்பில் நடந்துள்ள பயங்கரம்

சண்டிகார், டிசம்பர் 1

**பஞ்சாப்பில் பஸ்ஸில் பயணம்செய்த இருபத்துநான்கு பேர் இனம்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.**

பிரயாணிகள் பலருடன் பஸ் சென்றுகொண்டிருந்த பொழுது இடையில் ஏறிய நான்கு இனம் தெரியாத இளைஞர்கள் துப்பாக்கிமுனையில் சாரதியைப் பயமுறுத்தி பிரயாணிகளுடன் பஸ்ஸை கடத்திச் சென்றனர்.

இந்த பஸ்ஸை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த இளைஞர்கள் குறிக்கப்பட்ட பகுதியொன்றில் அதனை நிறுத்துமாறு உத்தரவிட்டு பயணிகளை பஸ்ஸைவிட்டு இறங்குமாறு பணித்தனர்.

பீதியடைந்திருந்தபிரயாணிகள் பஸ்ஸைவிட்டு இறங்கிய பொழுது இளைஞர்களால் சரமாரியாக சுடப்பட்டதினால் இருபத்திநான்கு பேர் இறந்துள்ளதுடன் எட்டுப் பேர் காயமடைந்தனர்.

பிரயாணிகள்மீது துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்துவிட்டு இந்த நான்கு இளைஞர்களும் அவ்விடத்தைவிட்டு தப்பியோடிவிட்டனர்.

### ராஜீவ் கண்டனம்

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியும், பல்வேறு அரசியல்கட்சிகளும் இந்தப் படுகொலையை கண்டித்திருக்கிறார்கள்.

இந்தப் படுகொலைச் சம்பவம் குறித்து பெரும் அதிர்ச்சி வெளியிட்ட திரு. ராஜீவ் காந்தி ஒன்றுமறியாத அப்பாவி மக்களுக்கு இழைக்கப்பட்ட கோழைத்தனமான செயல் இது என்றார்.

இந்தச் சம்பவத்தினால் துயருற்றுள்ள தாய், தந்தையர், மனைவியர் மற்றும் குழந்தைகளின் நிலைமை குறித்து தமது நெஞ்சம் நெகிழ்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் எதிராக இழைக்கப்படும் கொடிய சதித்திட்டத்தின் ஒரு அம்சமே இது என்றும் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

### ராஷ்டிரபதி கவலை

இந்தக் கொலை மனிதத்தன்மையற்ற ஒரு செயலாகும் என்று ராஷ்டிரபதி ஜானி ஸெயில்சிங் கவலைதெரிவித்தார்.

இந்தியாவின் ஒற்றுமையைக் குலைப்பதற்கு வெளிநாட்டு சக்திகளின் பணிப்புகளுக்கேற்ப நடாத்தப்பட்ட ஒரு சம்பவம் என்று இக் கொலைச் சம்பவத்தை பஞ்சாப் முதலமைச்சர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா வர்ணித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து பஞ்சாப் மாநிலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த திரு. பர்னாலா முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

பஸ் பயணிகள் இரக்கமற்ற விதத்தில் கொலைசெய்யப்பட்டிருக்கும் இந்த செயலானது நாட்டின் உறுதிப்பாட்டை குலைக்க வன்முறைச்செயல்களில் ஈடுபடும் பாகிஸ்தானில் பயிற்சிபெற்ற பயங்கரவாதிகளின் செயலேயாகும் என்று அகில பாரத ஷிரோமணி அகாலிதள் லோங்கோவால் பிரிவு தெரிவித்துள்ளது.

இப்பயங்கரச் செயல்களைக் கண்டிக்கும்முகமாக இன்று பஞ்சாப் முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

---

## ஐ. நா. நிதிநிலைமை மோசமடைந்துள்ளது

லண்டன், டிசம்பர் 1

ஐக்கிய நாடுகள் அமைப்பு நிதிநிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும் 1987ம் ஆண்டில் ஒரு வாரம் மட்டுமே செயல்படுவதற்கு அவசியம் நிதிஇருப்பதாகவும் ஐ நா. வின் தலைமைச் செயலர் திரு பெரஸ் டி கெறாய்யா தெரிவித்துள்ளார்.

ஐ நா. பட்ஜட்டில் இருபத்தைந்து சதவீத நிதியை அளித்துவரும் அமெரிக்காவே ஐ. நா. வின் இந்த நிதி தட்டுப்பாட்டிற்கு காரணம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

---

பாகிஸ்தானுடன்

## ஐ. நா. ஆதரவு பேச்சை தொடர ஆப்கானிஸ்தான் இணக்கம்

காபூல், டிசம்பர் 1

பாகிஸ்தானுடன் ஐ நா ஆதரவிலான பேச்சுக்களை மீண்டும் நடத்த தான் இணங்கியிருப்பதாக ஆப்கனிஸ்தான் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருப்புக்களை விலக்கிக்கொள்வதற்கான கால அட்டவணை குறித்து கருத்து வேற்றுமை தோன்றியதால் பேச்சுக்கள் தேக்கநிலையை அடைந்தன.

ஆப்கானிஸ்தான் வெளியுறவு மந்திரியும், ஐ நா. விசேஷ தூதுவரும் காபூலில் சந்தித்துப் பேசியபோது பேச்சுக்களை மீண்டும் தொடர்வதற்கான முடிவு எடுக்கப்பட்டது. (ஒ)

---

மாணவர்கள்

## ரியூட்டரிகளை நாடுவதால் பாடசாலையின் சேவை பாதிப்பாகும்

பண்டத்தரிப்பு திங்கள்

"உயர்தர வகுப்பு மாணவர்கள் மாத்திரமன்றி ஆரம்ப வகுப்பு மாணவர்களும் பாடசாலை முடிந்தவுடன் ரியூட்டரிகளை நாடி ஓடிச் செல்வதை இன்று எங்கும் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலை தொடருமானால் பாடசாலைகளின் நல்லசேவை பாதிக்கப்படுவதுடன் மாணவர்களும் பூரணத்துவமான கல்வியை பெறமுடியாதநிலை ஏற்படும்".

இவ்வாறு சில்லாலை றோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் ஏ. எஸ். லோறன்ஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு பி. இருதயதாஸ் அடிகளார், வட்டுக்கோட்டை வட்டாரக்கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா, பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்பசித்தம்பி ஆகியோரும் உரையாற்றினார்கள். (எ)

---

இராணுவம் நடமாட்டம் குறித்து

## செல்வச்சந்நிதி ஆலய நிர்வாகம் அரச அதிபரை சந்திக்கவுள்ளது

வல்வெட்டித்துறை, சனி.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வீதிகளில் இராணுவத்தினர் நடமாடுவதாலும், அங்குள்ள ஆலய கட்டிடங்கள், சில மடங்களில் இராணுவத்தினர் இருப்பது குறித்தும் சந்நிதி ஆலய நிர்வாகக் குழுவினர் யாழ் அரச அதிபரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

மேலும் யாழ். அரச அதிபரின் அனுசரணையுடன் ஜனாதிபதியைச் சந்தித்து தொண்டமானாறு செல்வச்சந்நிதி விவகாரங்கள் பற்றி பேச்சு நடத்தவும் முடிவு செய்துள்ளனர்.

---

விழிப்புக்குழு விசாரணை:

## பிள்ளைகளுக்கு மட்டும் தாபரிப்புப் பணம் 300 ரூபா

உடுவில், திங்.

தமது கணவன் குடும்பத்தை கவனிப்பதில்லையென்றும், இதனால் தான் வாழ்க்கை நடாத்துவது கஷ்டமாயிருப்பதாகவும் தமது கணவரிடம் தாபரிப்புபணம் பெற்றுதருமாறும் உடுவில் ஆலடியை சேர்ந்த இளம்பெண் சங்கவேலி விழிப்பு மன்றத்துக்கு கொடுத்த முறைப்பாட்டை விசாரணை செய்தபோது பிரதிவாதியான கணவர் தமது இரு பிள்ளைகளுக்கும் மாதம் 300 ரூபா தாபரிப்பு பணம் செலுத்தச் சம்மதித்தார்.

வாதியான இளம் பெண் தமது கணவர் வேலைக்கென கூறிவெளியே சென்றால் பல நாட்கள் திரும்பி வருவதில்லை என்றும், நித்தமும் மது அருந்துபவர் என்றும் அதனால் தமது குடும்பத்தை கவனிப்பதில்லை என்றும் விசாரணைகளின் போது கூறி தாபரிப்பு பணம் பெற்றுத் தருமாறு கோரினார்.

பிரதிவாதியான இளைஞர் தாம் மேசன் வேலை செய்பவர் என்றும் நிரந்தர வருமானம் இல்லையென்றும் கூறினார்.

தமது குடும்ப பிரச்சினைக்கு மனைவியின் பெற்றோரே மூலகாரணம் என்றும் கூறி தம்மை அவமானப்படுத்திய மனைவியை தாம் இனி ஏற்கப்போவதில்லை என்றும் தமது பிள்ளைகட்கு மட்டும் பணம் செலுத்த சம்மதிப்பதாகவும் கூறினார்.

கணவனையும் மனைவியையும் ஒற்றுமைப்படுத்த விழிப்பு மன்றத்தினர் எடுத்த சமாதான முயற்சிகளை இருவரும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் இருபிள்ளைகளுக்கும் மாதம் 300 ரூபா தாபரிப்பு பணமாக செலுத்துமாறு கணவரைபணித்தனர் வாதியும் பிரதிவாதியும் இச்சமாதான தீர்ப்பை ஏற்றுக்கொண்டனர்.

---

### பங்களாதேஷ் துணை அதிபர்

டாக்கா, டிசம்பர் 1

பங்களாதேஷில் மீண்டும் அமுலுக்கு வந்திருக்கும் அரசியலசாசனத்தின் கீழ் புதித மந்திரியான திரு நூருல்ஸ்லாம் துணை அதிபராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (ஒ)

---

சமாதானசபை முயற்சியால்

## பதிவுத் திருமணம்

உடுவில், திங்.

பெற்றோருக்கு தெரியாமல் இளம் பெண்ணை கூட்டிச்சென்ற இளைஞரையும் பெண்ணையும் விசாரணை செய்தபின்னர் அவர்கள் இருவருக்குமான பதிவுத்திருமணத்தை உடுவில் மக்கள் குழுவினர் நடாத்திவைத்துள்ளனர்.

இளம் பெண்ணின் தாயார் உடுவில் மக்கள்குழு சமாதான சபைக்கு செய்து கொண்ட முறைப்பாட்டில் தமது 17 வயதான மகளை அதே ஊரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தமக்குத் தெரியாமல் கூட்டி சென்று விட்டார் என செய்து கொண்ட முறைப்பாட்டின் மீது விசாரணைகளை மக்கள் குழுவினர் நடாத்தினர்.

விசாரணையின்போது இளைஞனும் இளம் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்புவதும் இளம் பெண்ணின் பூரண சம்மதத்துடன்தான் இளைஞர் அவரைக் கூட்டிச் சென்றதும் தெரிந்து சமாதான சபையினர் உடனடியாக இருவருக்கும் பதிவுத் திருமணம் செய்துவைத்தனர்.

---

## தலைவர் செல்லத்துரை



தொழில் சங்கவாதி அமரர் க. செல்லத்துரை அரசாங்க பொதுச் சேவை தொழிலாளர் சங்கத்தில் 21 ஆண்டுகள் யாழ் கிளையில் தொடர்ந்து தலைவராகவும் மத்திய செயற்குழு உறுப்பினராகவும் கச்சேரி நலன்புரிச் சங்கம் போன்ற பல்வேறு பொது ஸ்தாபனங்களில் முக்கியஸ்தராகவும் பதவி வகித்து சேவையாற்றினார்.

இவர் பழகுவதற்கு இனியவர். அவரது கனிவான பேச்சும் பண்பும் பொது மக்களிடையேயும் தொழிலாளர் வர்க்கத்தினருக்குமிடையேயும், பெருமதிப்பை பெற்றுக் கொடுத்தது. யாழ். கச்சேரியில் அலுவலகருக்கும் பொது மக்களுக்கும் வேண்டிய உதவிகளை எவ்வித எதிர்பார்ப்புகளையும் நோக்காது தமது சொந்த விடயமாகக் கருதிச் செய்து அவர்களை மகிழ்விப்பர், இவரது தொண்டு அவரிற்கு தலைவர் செல்லத்துரை என்ற புனைப்பெயரைத் தேடிக் கொடுத்தது.

எந்த உயர்ந்த அதிகாரிகளாயினும் சரி, அமைச்சர்களாயினும் சரி அமரர் செல்லத்துரை தலைவராகவே அவர்கள் மத்தியில் தோற்றமளிப்பார் இவர் சிறந்த முதிர்ந்த தொழிற்சங்க உறுப்பினர்களின் உரிமைகள் பெற பல போராட்டங்களில் முகம் கொடுத்தவர். 1980ம் ஆண்டு யூலை மாதம் நாடு பூராகவும் நடைபெற்றபொது வேலை நிறுத்தம் யாழ்ப்பாணத்திற்கு சிறப்பாக அமைய பெரும் பணியாற்றி செயல்வீரராகத் திகழ்ந்தார். இவ் வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்காக பொது ஸ்தாபனங்களில் நிதி திரட்டி தன்னால் இயன்றவரை அவற்றை அவர்கட்கு கிர்ந்தளித்தும் தொண்டாற்றினார். அப்போது வேலை நிறுத்தத்தினால் மனமுடைந்து பாதிக்கப் பட்டு நோய்வாய்ப்பட்டு இறுதியாக எம்மை விட்டு கடந்த 29-11-80ம் திகதியில் பிரியவேண்டிய துர்ப்பாக்கிய அவலநிலை ஏற்பட்டது.

சிறந்த தொழிற்சங்கவாதியான அவரை இந் நாட்டின் சகல இன மக்களும் தொழிலாளர் வர்க்கமும் எளிதில் மறந்துவிட முடியாது. அவரின் சேவை நலம் நிறைந்த வாழ்க்கை இலட்சியங்கள் மற்றவர்களுக்கெல்லாம் வழிகாட்டப்படும். அவரின் சேவைகளைப் பின் பற்றி அவர் விட்டுச் சென்ற அரும் பணிகளைத் தொடர்ந்து செய்வதே அவரின் ஆத்மா சாந்தியடைய நாம் செய்யும் பணியாகும்,

சி. ஆறுமுகம்-தலைவர்
சி. சி. வரதராசா-செயலாளர்
அ. பொ. சே. சங்கம்,

### மணிவாக்கு

எந்தத் தீர்விலும் கொஞ்ச முட்டாள்தனத்திற்கு இடமளிக்கவேண்டும்; இன்றேல் மூடர் அது விவேகமான முடிவென்பதை ஏற்றுக் கொள்ளார்.

—பீற் ஹெயின்

## நமது நோக்கு

# தெளிவான திட்பமான தீர்வு கைக்கெட்டுமா?

கண்ணனின் கீதையும், வள்ளுவரின் குறளும் உலகம் போற்றும் உயரிய ஞானநூல்களே. இவ்விரண்டையும் அச்சாக உடையது பாரத ஞான ரதம் என்னும் கருத்தை அமைத்துப் பாடினார் ஒரு பழங் கவிஞர்.

இன்றைய இளைஞர் உலகம் குறிப்பாக இந்தியாவிலும் இலங்கையிலும் இப்பழங் கவிஞர் காட்டும் புதுமையை ஒரு புரட்சிக் கருத்தாகக் கொள்வதே பொருத்தமானது பற்றின்றிப் பணிசெய்தல் கீதையின் உபதேசம். பகை நட்பாகக் கொண்டொழுகும் பண்புடையாளன். தகைமைக்கண் தங்கிற்று உலகு என்பது பொய்யா மொழி.

இன்று தமிழ்ப் போராளிகள் ஈடுபட்டிருக்கும் போர் பற்றின்றி பணி செய்த லென்ற கீதையின் இலட்சியத்துக்கு அமைகின்றது. சில வருடங்களாக தமிழ் இளைஞர் காட்டி வரும் வீரம், தியாகம் பற்றின்றிப் பணி என்பதில் ஆட்சேபமில்லை,

எந்தக் காரியத்திலும் சுயமைகாத்திராப்பிரகாரம் உள்ளிடுவதால் வேண்டத்தகாத அசம்பாவிதங்கள் நிகழ்வது சகஜம். தங்கள் உயிரை மாற்றானிடம்ஒப்படைக்காது போரில் முதுகு காட்டி ஓடாது உயிரை மாய்க்கும் உத்தி இக்காலப் போர்முறையின் கௌரவத்தை குறிக்கின்றது. அது கட்டுக்கடங்காத நிலையை நாடுமானால் பகைமை வளரும். அறப்போர் மாற்றம் அடைகிறது.

போரின் முடிவு என்னவானாலும் அமைதி வாழ்வுக்கு பகைமை ஒழியவேண்டும். எதிரியுடன் தான் பகைமை என்றில்லை. எங்கள் மத்தியிலும் பகைமை தோன்றி வளர்வதற்கு போதிய இடமுண்டு.

எனவே கீதையும் வள்ளுவமும் இரு அச்சாகக் கொண்ட இந்தியத் தேர் இன்று எங்களுக்கு ஒரு 'லிப்ற்' கொடுக்குமா? தேரோட்டத்திற்கு அக்கம் பக்கம் சூழ்நிலை சுமுகமில்லையென்றாலும், பாரத ரஷ்ய தேசம் 'பயப்படாதே' என்கிறது.

புதுடில்லி விஜயத்தில் இலங்கை விடயம்பற்றி கொர்பச்சேவ் ஒன்றும் சொல்லவில்லையே என்றும் ஏமாற வேண்டியிருக்கிறது.

ஈரான் (Ira/o n gate) கேட் இரும்புகேட்டில் கொழுவிக்கொண்ட றீகனே இலங்கை ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளை வாழ்த்தியிருக்கிறார்; அதே நேரத்தில் இஸ்ரேலிய அதிகாரி கொழும்பில் இறங்கி ஏறியிருக்கிறார்.

இத்தகைய சர்வதேச புருடர்களுக்கு 'இளைஞர்கள்' அஞ்சமாட்டாரென்ற தன்னம்பிக்கை இன்றும் நிலைத்திருக்கிறது. நீதியான தீர்வு கிட்டாவிட்டால் பிரிவினை நிச்சயமாவதை நம்ப முடியாத மூடர் உண்டா?

இரு வாரத்தில் முடியும் என்ற போர் இரு வருடத்திலே முடியும் சாத்தியமற்றதாகக்காணப்படுகிறது.

பிரிவினையை ஆதரிக்காத இந்தியா அமைதிக்குதவும் தீர்வினை தாமதிக்காது தீவிரமாகத் தொடரும் கடமையுடையது. அக்கடமையைக் கைவிடாது நிறைவேற்ற தமிழ்மாநிலமென்ற அடிப்படையில் தளராது இலங்கை அரசை நிர்ப்பந்திக்கும் பொறுப்புடையது.

# யாழ். பல்கலைக்கழகம்: வெளிவாரிப்பிரிவு

தமிழ் மக்களுக்குப் பொதுவாகவும் அவர்களின் உயர்கல்விக்குதவும் யாழ். பல்கலைக்கழகத்திற்குச் சிறப்பாகவும் இருள் அடர்ந்த காலம் இது.

இந்தக் காரிருளிலும் யாழ். பல்கலைக்கழகம் முன் எடுத்த காலைப் பின்வைக்காது பீடுநடைபோட மக்கள் அனைவரும் முன்வர வேண்டும்.

பல ஆண்டுகளாக பேராதனைக்குச் சென்று, பரீட்சை யெடுக்கும் வழக்கம் வடபகுதி வெளிவாரிப்பட்டதாரி மாணவர்களுக்கு பயங்கர பயிற்சியாகவே இருந்தது. அதனைத் தளர்த்தி, யாழ்ப்பாணத்தில் அப்பரீட்சைகளை நடத்த பல்கலைக்கழக மானியக்குழு இணங்கவில்லை. பரீட்சார்த்திகள் தமிழரானால் அத்தகைய துன்பங்கள் அவர்களைத் திருத்திவைக்குமென்ற எண்ணமோ என்னவோ; இப்பிடிவாதத்தின் காரணமாகலாம்.

இம்மாபெரும் நிறுவனம் இத்தகைய சிறுமையான நோக்குடையதல்லவென்பது இன்று கிடைக்கும் செய்தியின் விளக்கமாகும். இவ்வாரம் ஆரம்பமாகும் பட்டப்பரீட்சைகள் யாழ்ப்பாணத்திலும் நடைபெறுமென்ற செய்தி, போரிலும் சமாதானத்துக்கு இடமில்லாமற்போகவில்லை என்பதைக் குறிக்கிறது.

மாறுத மருள்நோக்குடையோர் இந்த மாற்றம், தமிழரிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காகவழங்கப்பட்ட சலுகையென்று கேலி செய்வது நியாயமாகாது.

இதற்கு மேலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே ஒரு வெளிவாரிப் பிரிவை ஆரம்பிக்கவேண்டுமென்று பிரயத்தனம் எடுக்கும் துணைவேந்தர் வித்தியானந்தன், இந்த முயற்சியில் வெற்றிகாணவேண்டுமென்று விழைகின்றோம்.

இலங்கையின் பெரும்பான்மை லண்டன் பட்டதாரிகள், சுயமுயற்சியில் வெளிவாரி மாணவர்களாக தூரலண்டனிலிருந்து பட்டம் பெற்றதை மறந்துவிடக்கூடாது.

# சுவிஸ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகள்

சுவிட்ஸர்லாந்திலிருந்து எஸ். செல்வம்

கடந்த 17-10-86ம் திகதி சுவிஸ் அரசு 40 தமிழ் அகதிகளை சிறிலங்காவிற்கு நாடு கடத்தப்போவதாக அறிவித்திருந்தது இவர்கள் சுவிஸ்ஸில் அரசியல் அடைக்கலம் கோரியிருந்தார்கள் இவர்களது தஞ்ச விண்ணப்பங்கள் சுவிஸ் அகதிகளுக்கு பொறுப்பான நீதிச்சபை நிராகரித்து விட்டது. இவர்கள் இலங்கையின் தென்பகுதியில் முன்பு வாழ்ந்தவர்கள் என்றும் தென் பகுதியில் தமிழர்களுக்கு ஆபத்து இல்லை அங்கு அமைதி நிலவுகின்றது ஆகவே இவர்களை திருப்பி அனுப்பினால் இவர்கள் இலங்கையின் தென் பகுதியில் வாழலாம் என சுவிஸ் அரசசெய்திகள் கூறின. இவ் அறிவிப்பானது சுவிஸில் வாழும் தமிழர்களுக்கும், அகதிகள் உதவிநிறுவனங்களுக்கும் சமய நிறுவனங்களும் அதிர்ச்சியை கொடுத்தது. அதே வேளை அகதிகள் உதவிநிறுவனங்கள் சுவிஸ் அரசின் இம்முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக சில போராட்டங்களை செய்ய தீர்மானித்துள்ளன.

### தேவாலயங்களில் அடைக்கலம்

கடந்த மாதம் 6ம் திகதி சுவிஸ் அகதிகள் நிறுவனம் (A.A.A) ஒன்றின் தலைவர் டாக்டர் சூப்பர், தமிழ் அகதிகள் மீது கருணையுள்ளவர்களை பேர்னில் உள்ள வெத்தலகம் என்னும் தேவாலயத்தில் ஒன்று கூடும்படி அறிவித்திருந்தார். சுவிஸ் அரசு திருப்பி அனுப்பவுள்ள 40 தமிழ் அகதிகளுக்கு நாம் எவ்வாறு பாதுகாப்பு கொடுக்கலாம், மேற்கொண்டு என்ன நடவடிக்கைகளை செய்யலாம் என ஆலோசிப்பதற்காகவே அக்கூட்டம கூட்டப்பட்டது. 500 இற்கு மேற்பட்ட சுவிஸ் மக்களும் 250 இற்கு மேற்பட்ட தமிழர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அப்பொதுக்கூட்டத்தில் சுவிஸ் அரசின் முடிவை பலர் கண்டித்து உரையாற்றியதோடு பலதேவாலயங்கள் அனுப்பப்படவுள்ள 40 தமிழ் அகதிகளுக்கும் அரசசட்டத்தைமீறி அடைக்கலம் கொடுக்க முன் வந்துள்ளன. அக்கூட்டத்தின் இறுதியில் அக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தமிழ் உணவு வழங்கப்பட்டது. இச்சம்பவங்களை மறுநாள் பத்திரிகைகள் யாவும் பிரசுரித்திருந்தன.

### அரசின் விடாப்பிடி

கடந்த பங்குனி 10ம் திகதி சுவிஸ் அரசு பாராளுமன்றத்தின் தமிழ் அகதிகள் பற்றி விவாதிக்கப்பட்டு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானமானது சுவிஸ் அரசில் தஞ்சம் கோரியோர் பலர் பொருளாதார அகதிகளாகக் காணப்படுகிறார்கள் என்றும் இவர்களை திருப்பி அனுப்பினால் அவர்களுக்கு ஆபத்தில்லை என்றும் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி உடனடியாக 289 தமிழ் அகதிகள் சிறிலங்காவிற்கு நாடு கடத்தப்படுவார்கள் என்றும் மற்றவர்கள் படிப்படியாக நாடு கடத்தப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது இம்முடிவு சுவிஸில் உள்ள தமிழ் அகதிகளை பெரும் பரபரப்பிற்கூட்டப்படுத்தியது இதையடுத்து சில தமிழர்கள் வேறு நாடுகளுக்கு சென்றார்கள். சுவிஸ் அரசின் இம்முடிவை யடுத்து சுவிஸ் அகதிகள் நிறுவனங்கள் தமிழ் அகதிகளின் நலன்களை பாதுகாப்பதற்காக ஒர் சொலிடாரிற்றியை அமைத்து பல போராட்டங்களை நடத்தினார்கள் தமிழர்களின் இருபெரும் ஊர்வலங்கள் தலைநகர் பேர்னிலும் ஜெனிவாவிலும் நடத்தப்பட்டதோடு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பிரிவுக்கு UNHCR ஊர்வலமாகச் சென்று அகதிகளுக்கான ஸ்தானிகரைச் சந்தித்து மகஜரும் சமர்ப்பிக்தனர் உலகில் உள்ள அனைத்துத் தமிழகதிகளையும் இன ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் என அங்கீகரிக்க வேண்டும் என்றும் இலங்கை இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகளை (UNHCR) நேரடியாகக் கவனிக்க வேண்டுமென்றும் தமிழ் அகதிகள் உருவாகாது தடுக்க உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் வேண்டுகோள் விடுத்ததோடு தமிழ் மக்களின் நிலையும் எடுத்து விளக்கப்பட்டது.

சுவிஸ் அரசு பல நெருக்கடிகள் ஏற்பட்டதையடுத்து தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் விடயத்தை ஒத்திப் போட்டது. தமிழ் அமைப்பு பிரதிநிதிகள் சுவிஸ் அரசின் நீதித்துறைக்கு பொறுப்பான அமைச்சர் டாக்ரர். எலிசபெத் கோப்பிற்கு கடிதம் [13-4-86] ஒன்று அனுப்பியிருந்தார்கள். அக் கடிதத்திற்கு பதிலும் கிடைத்தது கடந்த ஒக்டோபர் மாதம்வரை தமிழகதிகளைத் திருப்பி அனுப்ப மாட்டோமென உறுதியளிக்கப்பட்டிருந்தது.

ஒக்டோபர் மாதம் வரை எவரையும் திருப்பியனுப்பவில்லை. ஆயினும் போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டு சிறையில் உள்ள கிலர் இரகசியமான முறையில் நாடு கடத்தப் பட்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கொடிய போதை வஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டதால் சிறைவாசம் அனுபவித்து வருகிறார்கள். கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இதில் தமிழ் பெண்களும் அடங்குவர். தமிழ் அகதிகளாக சுவிசிற்கு வந்தவர்கள் போதை வஸ்து வியாபாரத்தில் ஈடுபடுவதனால் சுவிஸ் மக்களின் ஆதரவு மிகவும் குறைந்துள்ளது. சுவிசில் வெளியாகும் பிளிக் [BLICK] என்னும் பத்திரிகையில் வாரத்தில் இரண்டு அல்லது ஒருதடவையாவது தமிழர்களின் போதைவஸ்து விடயமாக செய்திகள் வெளியாகும் தமிழர்களுக்கெதிராகவே செய்திகள் இருக்கும். சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும தமிழ் மக்களின் விடிவுக்கு சர்வதேச ஆதரவை திரட்ட வேண்டிய இவ்வேளையில் போதை வஸ்து நடவடிக்கைகள் சர்வதேச ஆதரவை இழக்கவைத்துள்ளன.

### வன்னியில் ஆர்ப்பாட்டம்

வவனியா, திங்கள்

பல்கலைக்கழகமாணவர் விஜிதரன் காணமற்போனது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை வன்னிப்பகுதி மாணவர்கள் பகிஷ்கரிப்பு. ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினார்கள்.

### மயானத்திற்கு புதிய மண்டபம்

யாழ்ப்பாணம், செவ்

கொக்குவில் மயானத்தில் தங்குவதற்கென புதிதாக அமைக்கப்பட்டமண்டபத்தை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் சம்பிரதாயபூர்வமாகத்திறந்து வைத்தார்.

### பாராட்டு



அகில இலங்கை ரீதியில் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட 5ம்வகுப்பு புலமைப் பரீட்சையில் குப்பிளான் விக்கினேஸ்வர மகாவித்தியாலய மாணவன் சிவமகாலிங்கம் அரவிந்தன் 189 புள்ளிகள் பெற்று அகில இலங்கையில் 1ம் இடத்தில் சித்தியடைந்துள்ளார். யாழ். இந்துக் கல்லூரியில் தொடர் கல்வியை ஆரம்பிக்க இருக்கும் செல்வன் அரவிந்தன் வயதுக்கு மிஞ்சிய சமய அறிவும், பொது அறிவும் நிறைந்த மாணவராவர் தன்னைப் போன்ற பல மாணவர்களை இப்பரீட்சைக்குத் தயார் செய்த ஆசிரியர்களுள் ஒருவரான திரு. ந. இரத்தினசிங்கம் அவர்களைநேரிலேசென்றுநன்றி தெரிவித்த பெருமைக்குரிய மாணவனுமாவர் உரும்பராய் இந்துக் கல்லூரி ஆசிரியரும், சிறந்த சமயச் சொற்பொழிவாளருமான திரு. சிவமகாலிங்கம் திருமதி சிவமகாலிங்கத்தின் சிரேஷ்ட புதல்வனுமாவர். செல்வன் அரவிந்தன் எதிர்காலத்தில் படித்து பட்டம் பல பெற்றுப் பதவிகள் வகித்து பிறந்த மண்ணுக்கும் நாட்டுக்கும் எம் இனத்துக்கும் சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவன் துணை புரிவாராக என்று பாராட்டிக் கொள்கின்றோம்.

குப்பிளான் சைவமகாசபை

## மக்கள் கருத்து

### நெற்பயிர்கள் பாதிப்பு

பண்டத்தரிப்பு திங்கள்

வலிமேற்கு, வலிதென் மேற்கு பகுதிகளில் நெற் பயிர்களை 'மடிச்சுக்கட்டி' என்னும் நோய் பாதித்துவருவதாகவும் இதனால் தாக்குண்ட நெற்பயிர்களின் இலை வைக்கோலைப்போல ஆகி அழிந்து போகும்நிலை ஏற்பட்டதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## வியாபார ஸ்தாபனங்களில்

# மனிதபாவனைக்கு ஆபத்தான ரின்மீன்கள்பற்றி எச்சரிக்கை

கண்டுக்குளி, திங்கள்

மனித பாவனைக்கு உதவாத ஆபத்தான ரின்மீன்கள் விற்பனை செய்யப்படுவது தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் லேபல் இல்லாத ரின்மீன்களையும் மற்றும் கொட், டொல்ப்கின், வெலியக், பென்குயின், ரையோ, போன்ற ரின் மீன் வகைகளையும் மக்கள் பாவிக்கக்கூடாதெனவும் இவற்றைப் பாவிப்பதால் பலதரப்பட்ட நோய்களுக்கு ஆளாக நேரிடுமெனவும் மேற்கூறப்பட்டவகை ரின் மீன்கள் வியாபார ஸ்தாபனங்களில் விற்பனைக்கு இருந்தால் அதுபற்றிய தகவலை தந்துதவுமாறும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு. த. மார்க் கண்டு அறிவித்துள்ளார்.

இதுபற்றிய சுற்றறிக்கையொன்றும் உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்தினால் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ண)

## புதுடில்லி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாரிகள் எல்லாவற்றையும் முண்டியடித்துக்கொண்டு திரு காந்தி தனது புதிய காரை அதி வேகத்தில் ஓட்டிச்சென்றார்.

அந்நேரத்தில வீதிக் கட்டுப்பாட்டை நிலைப்படுத்த பெருந்தெருவில்நின்ற பொலிஸ்காரர் ஒருவர் திரு. காந்தியின் காரை மறித்தார். பிரதமர் காந்தி காரை நிறுத்தியதும் ஆத்திரமடைந்தபொலிஸ்காரர் காரின் போனட்டில் ஓங்கி அடித்துவிட்டு, காரை ஓட்டிவந்தவரை வெளியேவருமாறு உத்தரவிட்டார்.

காந்தியும் உத்தரவுக்குப் பணிந்தார். பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அந்த இடத்தை அடைந்தபோதுதான் தான் மறித்து வைத்திருந்தவர் பிரதமர் ராஜீவ் காந்தி என்பதைப் பொலிஸ்காரர் அறிந்துள்ளார்.

அதன்பின்பு பொலிஸ்காரர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் பிரதமர் காந்தியை வழியனுப்பிவைத்தார்.

காந்தி சென்றவார் இம்மாத முற்பகுதியில் ஜோர்தான் மன்னர் ஹுசைனினால் அவருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டதாகும். இச்செய்தியை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. [கே-ரா]

## மலையக---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் நிரந்தர குடிகளாக்கப் பட்டுவருவதுடன், அத்தோட்டங்களைச் சேர்ந்த தமிழ்த் தொழிலாளர்கள் வெளியேற்றப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்நடவடிக்கைகள் குறித்து மலையகப் பகுதியில் பரவலான எதிர்ப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதுடன், அமைச்சர் எஸ். தொண்டமான் மூலம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [ரா]

## ரயில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலியானவர் மு யோகராஜா என்பவராவர். இவர்வவனியா குசைப்பிள்ளையார் குளம் என்னும் இடத்தைச் சேர்ந்தவர். காயமடைந்தவர்களில் வட்டுக்கோட்டை கலைநகரைச் சேர்ந்த தேவஞானம் 26வயது என்பவர் ஆபத்தான நிலையில் வவுனிய ஆஸ்பத்திரியிலிருந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செலலப்பட்டுள்ளார். காயமடைந்து வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு:-

ராஜேஸ்வரன் [23 வயது] மடுக்கோயில், மேரிமொடில்லா [25 வயது] பண்டிவிரிச்சான், ஜெயசீலன் [23 வயது] பண்டிவிரிச்சான், சிவபாக்கியம் [34 வயது] பண்டிவிரிச்சான், விஜயராஜா (16வயது) யாழ்ப்பாணம், க முருகாயி (35 வயது) மாத்தளை ஜெஸ்மின் (8 வயது) மாத்தளை, ரேணுகா (3 வயது) வட்டுக்கோட்டை, முருகுப்பிள்ளை யாழ்ப்பாணம். (ஆ)

சிலங்கள் தினமட்டும்
வெலிங்டன்
திரையில்
10-30, 2-30, 6 30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கள்ளாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)
அடுத்த வெளியீடு
யேசுநாதர்

லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
Yul Brynner,
Steven Mcqueen
in
MAGNIFICENT
SEVEN
[Attack And Action]

## பயங்கரவாத---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் ஒருவரும் மனிதஉரிமை ஸ்தாபனங்களின் அங்கத்தவர்களெனக் கூறப்படும் சிலரும் அடங்குவதாகவும் இவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டோரில் சிலர் வெள்ளப்புவவில் ஆயுதகளஞ்சியம் ஒன்றை அமைத்திருந்தனரெனவும் பொலிஸார் அண்மையில் இக்களஞ்சியத்தை முற்றுகையிட்டபோது இரு ஸ்ரேலிங் மெஷின் கன்கள், பல ஸொட்கன்கள் உட்பட பலபொருட்களைக் கைப்பற்றியதாகவும் இவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## தட்டுப்பாடுநீங்கியது

யாழ்ப்பாணம், செவ்

யாழ் மாநகர சபை ஆயுள்வேத வைத்தியசாலைக்கு 32000 ரூபா பெறுமதியான மருந்துகள் கிடைத்துள்ளன.

ஆயுள்வேத மருந்துக் கூட்டுத் தாபனத்தில் இருந்து இம்மருந்துகள் தருவிக்கப்பட்டது. இதனால் மேற்படி வைத்திய சாலையில் இருந்துவந்த மருந்து தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

## முல்லைத்தீவில் மலேரியா

ஒட்டுசுட்டான், செவ்

முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள கிராம மக்கள் அநேகர் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவுப் பகுதியில் தற்போது நிலவும் பதற்றநிலை காரணமாக நகர்புற வைத்திய சாலைகளுக்குச் சென்று சிகிச்சை பெற முடியாது கஷ்டமுறுகின்றனர். (வா)

## மோட்டார்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில், பச்சைநிற வானில் வந்தவர்களால் மோட்டார் சைக்கிளொன்று கடத்தப்பட்டது. அதேபோல் கடந்த 30-ம் திகதியன்று மானிப்பாயில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் வைத்து பச்சைநிறவானில் வந்தவர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றை பறித்துச் சென்றுள்ளார்கள். எமது முகாமொன்றில் வந்து மோட்டார் சைக்கிலை மீளப்பெற்றுச் செல்லும்படி உரிமையாளரிடம் மோட்டார் சைக்கிலை கடத்தியவர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

இத்தகைய சம்பவங்களுக்கும் எமக்கும் எதுவிததொடர்புமில்லை என்று கூறிக்கொள்வதோடு மக்கள் மத்தியில் எம்மைப்பற்றி தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தும்வகையில் நடைபெற்றுவரும் இச்சம்பவங்கள்பற்றி மக்களை விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எமதுஸ்தாபனத்தின்தேவைகளுக்காக எமது ஸ்தாபனத்தின் பெயரைப்பாவித்து உங்களிடம் யாரவது வாகனங்களைக்கேட்டால் உங்களுக்கு பரீட்சயமானவர்களிடமோ அல்லது அடையாளம் காணக்கூடியவர்களிடம் மட்டுமே கொடுக்கவும் அத்துடன் இதுபோன்ற சம்பவங்கள் பற்றிய தகவல்களை எமக்கு தெரிவியுங்கள்.

நியூவிக்ரேஸ்
புதிய வீடியோ பட வெளியீடுகள்
(1) சலங்கையில் ஓர் சங்கீதம்
மோகன்
(2) நம்ப ஊரு நல்ல ஊரு
ரேகா
(3) அடுத்தவீடு
சந்திரசேகர், இளவரசி
நியூவிக்ரேஸ்
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
தொலைபேசி: 23532. [A-329]

மிது வீடியோ மூவிஸ்
மிது வீடியோ மூவிசாரின் நேற்றைய
வெளியீடு
சந்திரசேகர், எஸ். வி. சேகர், இளவரசி
செந்தில் நடித்த
"அடுத்த வீடு"
(தரமான பிரதி)
மிது வீடியோ மூவிஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.
A 3176

# "மினி சினிமா அருகில் குடிவகை விற்கக்கூடாது"

யாழ்ப்பாணம், செவ்வாய்

மினிசினிமாக்களின் அருகில் குடிவகை விற்றல், போதைப் பொருள் விற்றல், பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்றவை தவிர்க்கப்படுவதுடன் இவை குற்றங்களாகவும் கருதப்படுமென மினிசினிமா ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஒன்றியத்தின் கமிட்டிக் கூட்டம் அண்மையில் அதன் தலைவர் திரு. ச. சிவராமன் தலைமையில் கூடியபோதே இம்முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள்:

மினிசினிமா ஒன்றியத்தின் திரைப்படத்தணிக்கைக் குழு அனுமதிக்கும் படங்கள் மட்டுமே திரையிடப்பட வேண்டும் வீடியோ கிளப்பில் வரும் படங்கள்யாவும் திரைப்படத் தணிக்கைக் குழுவின் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பின்பே மினிசினிமாக்களில் திரையிட அனுமதிக்கப்படவேண்டும். கமராக் கொப்பிகளையின் அவை தடைசெய்யப்பட வேண்டும்.

ஆபாசப்படங்கள் காண்பிக்கப்பட்டாலோ அல்லது திரைபடத்தணிக்கைக் குழுவினால் தடை செய்யப்பட்டபடங்கள் காண்பிக்கப்பட்டாலோ அல்லது கமராக்கொப்பிகள்காண்பிக்கப்பட்டாலோ அவைமினிசினிமா ஒன்றியத்தின் கண்காணிப்புப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்படும். அத்துடன் வீடியோ கிளப்பில்லாமல் நேரடியாக கொழும்பிலிருந்து வீடியோ கசற்றுகளை பாவிக்கும் மினிசினிமா உரிமையாளர்கள் தணிக்கைக் குழுவின் அனுமதியைப் பெற்ற பின்னரே ஓட அனுமதிக்கப்படுவர். ஆபாசச் சுவரொட்டிகள் மினிசினிமாக்களில் போடுவது தடைசெய்யப்பட வேண்டும்.

பொதுமக்கள் மினிசினிமாக்களில் இருந்து சிகரட் புகைத்தல், மதுபோதையிலிருந்து கலாட்டா செய்தல் போன்றவை பாரிய குற்றமாகக் கருதப்படும். இதை மீறுவோர் மினிசினிமா ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழுவினரால் எடுக்கப்படும் நடவடிக்கைகட்கு ஆளாவார்கள்.

போயா நாட்களில் மினிசினமாக்களில் படம் ஓடப்படமாட்டாது. அன்றைய தினம் மினிசினிமா ஊழியர்கள் அனைவருக்கும் விடுமுறை நாளாகும். அந்த நாட்களில் கிராமங்களில் வாசிகசாலைகள், கோயில்களில் கட்டிட நிதிக்காக படப ஒடுவதற்கு அனுமதிக்கப்படும். அவையும் மினி சினிமா ஒன்றியத்தின் அனுமதிபெற்றே காண்பிக்கமுடியும்.

மினிசின்மாக்களில் ஓடும் படங்கள் எமது போராட்டத்தில் இருந்து மக்களை விலகிச் செல்லாது மக்களை போராட்டத்தில் இணைக்கக் கூடியகருத்தம்சங்கள் உள்ளபடங்களாக ஒடுவது சிறந்ததென்றும் அதை மினிசினிமா உரிமையாளர்கள் கவனத்தில் எடுப்பார்கள் என்றும் சினிமா ஒன்றியம் நம்புகிறது. சிவில் நிர்வாகம் அற்ற இவ்வேளையில் மக்களே விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும் என்றும் சுகாதார வசதிகள் அற்ற மினிசினிமாக்கள் தடைசெய்யப்படவேண்டும் என்றும் கள்ளரிக்கற்றுக்கள்பாவித்தல் குற்றமென்றும் வாரத்திற் கொருமுறை ஒன்றியத்தின் வரிப்பணம் கட்டாயமாக செலுத்தப்பட வேண்டும் என்றும் மினிசினிமா ஒன்றியம் பணிக்கின்றது.

மினிசினிமாக்களை பரிசோதிப்பதற்கு வரும் கண்காணிப்புகுழுவினர் மினிசினிமா ஒன்றியத்தின் அடையாள அட்டையை வைத்திருப்பார். அதுஇல்லாதவர்களை பரிசோதனை செய்வதிற்கு அனுமதிக்க வேண்டாம்என்றும் அடையாள அட்டைகளை கொண்டு வருபவர்களை மட்டுமே அனுமதிக்கும்படியும் மினிசினிமா உரிமையாளர்களை கேட்டுக் கொள்கின்றோம். அடையாள அட்டை இல்லாதுவந்து பரிசோதனைகளை முயற்சிகளில் யாரும் ஈடுபடலாம். எனவே மினிசினிம உரிமையாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி வேண்டப்பட்டுள்ளது.

மினிசினிமாக்களையும், கலாச்சாரத்தையும் செழுமையாக்க ஏனைய மினிசினிமா உரிமையாளர்களதும் பொதுமக்களதும் ஆலோசனைகளை மினிசினிமா ஒன்றியம் எதிர்பார்க்கிறது.

## பத்துப்பேர்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்ற பேரில் அப்பாவிப் பொதுமக்கள் கைதுசெய்யப்படுகின்றனர். இவர்கள் கைதுசெய்யப்படும்போது முகமூடிமனிதர்கள் மூலம் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்படுகின்றனர். இவ்வாறு முகமூடி மனிதர்களின் உதவியுடன் பொதுமக்கள் கைதுசெய்யப்படுவதை உடன் நிறுத்த வேண்டுமென இக்குழுவினர் வற்புறுத்தியதுடன் பலத்த கண்டனத்தையும் தெரிவித்தனர்.

முகமூடியுடன் வருபவர்கள் தேடுதல் நடவடிக்கையின் போது தம்முன்னால் நிறுத்தப்படும் பொதுமக்கள் அவர்களது கோபக்காரர்களாக இருந்தால் தமிழ்த்தீவிரவாதிகளென அடையாளம் காண்பிக்கின்றனர். எனவே இந் நடவடிக்கை அப்பாவிப் பொதுமக்களின் வாழ்க்கையில் பலத்த இன்னல்களை விளைவிக்கின்றது.

மேலும் கைதுசெய்யப்பட்ட பலர் நிரபராதிகளெனத் தெரிவிக்கப்பட்டும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. இவர்கள் படைமுகாம்களில் பலமாகத் தாக்கப்பட்டு, அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் குணப்படும்வரை தடுத்துவைக்கப்படுகின்றனரென நாம் அறிகின்றோம் இத்தாக்குதல்களின் போது மரணமடைந்துள்ளவர்களை பயங்கரவாதிகளெனவும், அவர்கள் மோதலில் இறந்துள்ளனரெனவும் பின்பு அரச செய்தித் தொடர்பு சாதனங்களில் வெளியாகின்றது. அல்லது காணமற்போய்விட்டாரெனக் கூறப்படுகின்றது.

இக்குழுவினர் கைதுசெய்யப்பட்ட அரச, கூட்டுத்தாபன ஊழியர்களின் விபரங்களைத் தமக்குக் கொடுத்துதவுமாறு இணைப்பதிகாரியிடம் கோரியதுடன், தாம் தயாரித்துச் சென்ற இரு பட்டியல்களையும் அவரிடம் சமர்ப்பித்தனர். இபபட்டியல்களில் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் ஒன்று மற்றையது காணமற்போனவர்களினதும், தடுப்புக் காவலில் உயிருடன் இருப்பவர்களினதும் விபரங்களாகும்.

தூதுக் குழுவினரின் கோரிக்கைகளுக்குப பதிலளித்த இணைப்பதிகாரி, தாம் தூதுக் குழுவினர் குறிப்பிட்டவைகள் தொடர்பாகப் பரிசீலனை செய்வதாகவும் படைமுகாம்களில் சித்திரவதை செய்யப்படுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுப்பதாகவும் கூறினர்.

தூதுக்குழுவினர் தெரிவித்த விபரங்களில் சைதான அரச கூட்டுத்தாபன ஊழியர்களில் பத்துப்பேர் சுட்டுக்கொலப்பட்டதாகவும் எட்டுப் பேர் காணமல்போனதாகவும், 20 பேர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. [கே]

# "இறுதி மூச்சு உள்ளவரை மக்களை பாதுகாப்போம்"

## — கிட்டு

வல்வெட்டித்துறை, திங்.

"எமது ஆரம்பகால உறுப்பினர்களில் சங்கர் பலிக்களத்தில் முதற்புலியாக வீரசொர்க்கம் அடைந்தார். வீரமரணத்தைத் தழுவும் ஒவ்வொரு இளம்புலிகளின் அடிச்சுவடுகளின் பின்னால் அவர்கள் தமிழீழ மண்ணுக்காகச் செய்த தியாகங்கள் எமது வீரர்களுக்கு மேன மேலும் உறுதியைத் தருகின்றன. சங்கரின் உருவச்சிலையைக் காணும ஒவ்வொரு தமிழ்மகனும், எமது வேங்கைகள் செய்த தியாகங்களுக்குச் சாட்சியம் கூறுவனவாக அமைகின்றது.

இவ்வாறு வல்வெட்டி ஊரிக்காடு சந்தியில் லெப்டினென்ட் சத்தியநாத (சங்கர்)ரின் உருவச்சிலை திரைநீக்க வைபவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட தளபதி கிட்டு தமது உரையின் போதுகூறினார்.

இவ்வைபவத்தில் தொடர்ந்தும் பேசிய தளபதி கிட்டு மக்கள் எம்மிடத்திலகொண்டுள்ள நம்பிக்கை, எமக்குத் தரும் ஆதரவு யாவும் எம்மை பெருமை கொள்ள வைக்கிறது. எமது இறுதி மூச்சு உள்ளவரை மக்களை பாதுகாப்போம் என நாம உறுதி கூறுகிறோம் என்றார்.

உருவச்சிலை உாவாச்கியசிற்பி லோகநாதன் கௌரவிக்கப்பட்டார்.

# இன்றைய பலன்

மாதம்: கார்த்திகை
திகதி: 16 (2-12-86)
நட்சத்திரம்: கேட்டை
திதி: பிரதமை
கிழமை: செவ்வாய்

மேடம்: அபாயகாரியங்களில் ஈடுடுவோர் கவனம் செலுத்தவும். தொழில் முன்னேறறத்தில் தடைகள் தோன்றும். உற்சாகம் குறையும்.

இடபம்: தொழில் சம விருத்தியண்டு. குடும்பத்திலும் புதிரான நிலை தோன்றும்.

மிதுனம்: அமைதிக்குப் பங்கம் ஏற்படும். பிறர் விடயத்தில் தலையிடாதிருக்கவும்.

கடகம்: குடும்ப நிலைப் பிரிவும் ஏற்படலாம்.

சடகம்: பிதாவழித் தனமுமுண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர் பதவி உயர்விற்கும் வழிகோலப்படலாம்.

சிங்கம்; இலட்சிய நோக்குடன் செயலாற்றுவீர்கள் வாழ்விலும் உச்சகம் பிறக்கும். கடமையிலும் முன்னேற்றமுண்டு.

கன்னி: சகோதரா வழிச் சுகமுமுண்டு. மனதிலும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். தொழில் விருத்தியுமுண்டாம்.

துலாம்: தூரதேச வாசம் துயரத்தில் ஆழ்த்தும் வைத்தியச் செலவுமுண்டு வணிகர் வாழ்வில் சோபிதம் அடையும்.

விருச்சிகம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம் மோசடியை ஏற்படுத்தும். பொருவிரையமுமுண்டு. தொழிலிலும கருத்து வேற்றுமை தோன்றும்.

தனுசு: காதலர்கள் வாழ்க்கையல் புதிய தெம்பு தோன்றும், கல்வி உயர்வுமுண்டு. கடமையிலும் முன்னேற்றமுண்டு.

மகரம்: சிறு பிணியும் தோன்றும். தொழிலிலும் கேடுகளையும். முதலீடுகளை தவிர்த்துக்கொள்ளவும்.

கும்பம்: மாதுரு வழியாலும் மகிழ்வுண்டு. புதுமனைச் சிறப்புமுண்டு, கடமையிலும உயர்வுண்டு.

மீனம்: பேச்சாளர் போற்றப்படுவர். பந்தபாசம் தலைதூக்கி நிற்கும் செய் தொழிலில் சிறப்புமுண்டு.

## திருமலை வே. ரவீந்திரன்

# அன்புக்கோர் உறைவிடம்

வட்டுக்கோட்டை கலைநகரைச் சேர்ந்த ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சதாசிவம் அவர்களின் திடீர் மறைவு அவரது கணவன், பிள்ளைகள், உறவினர் ஆகியோர்களுக்கு மட்டுமல்ல வட்டூர் மக்கள் அனைவருக்குமே பேரிழப்பாகும்.

வெள்ளை உள்ளம் படைத்த எழில் ஜோதி தனது கணவனை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற சமயம் இலங்கை இராணுவம் சிதறிய ஷெல்லால் ஒரு தமிழ் மகன் சிதறுண்டு இறந்த காட்சியை நேரிலே கண்ணால் கண்ட போது அதிர்ச்சி தாங்க முடியாது அடுத்த நாளே அஸ்தமித்துவிட்டது.

தனது ஆசிரியச் சேவைகளை சிங்களப் பிரதேசங்கள் சிலவற்றில் செய்துவிட்டுப் பின்பு தனது பிறந்த மண்ணை வடடூர்க் கிராமத்துக்கு வந்தார். இவர் 1962க்குப் பின்னர் வட்டூர்த் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பித்தார்.

இவரிடம் 1970 — 1975ப் ஆண்டு வரை கல்வி கற்கும் பேறு எனக்குக் கிடைத்தது பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் எல்லோரும் இவரைச் செல்லமாக "மாலிக்குட்டி ரீச்சர்" என்றே அழைப்பார்கள்.

பாடசாலையில் ஆரம்ப வகுப்புத் தொடக்கம் 10ம் வகுப்பு வரை தமிழ், சமயம், சமூகக்கல்வி, கணிதம் போன்ற பாடங்களைத் திறமையாகக் கற்பித்து வந்தார். பாடசாலையில் லீவு லீவில் சென்ற நாட்களை விரல் விட்டு எண்ணலாம். எல்லா மாணவர்களையும் தன் பிள்ளைகளைப் போல் பேணி அவர்களின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் ஊன்றுகோலாய் உதவியவர். குழந்தைகள் பால் அன்பும், பெரியோர்கள் பால் மதிப்பும் காட்டித் தனது பணியைத் திறம்படச் செய்து வந்தார்.

இவர் தனது கடமைகளை பாடசாலை, வீடு ஆகியவற்றில் நின்று விடாது மாதர் சங்கம், சமய ஸ்தாபனங்கள், கலைவாணி கல்வி நிலையம் ஆகியவற்றின் தலைவராகவும், செயலாளராகவும், ஆலோசகராகவும் கடமையாற்றி இவ்வூர் மக்களிடையே சிறந்த பாராட்டையும் பெற்றார்.

பாடசாலையில் நாடகப் போட்டி, பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டிகளுக்கான பல நிகழ்ச்சிகளைத் தயாரித்து பாடசாலைக்கும் எமது கிராமத்துக்கும் பெருமதிப்பைத் தேடித் தந்தவர்.

இவருடைய சேவைகள் எப்போதும் மங்காதவை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவோமாக.

ம. முருகானந்தன்,
வட்டுக்கோட்டை.

## 4-வது வருட நினைவஞ்சலி



அப்பாப்பிள்ளை சிவகுருநாதன்
(சிரேஷ்ட சட்டத்தரணி, கொழும்பு)

மறைவு: 02-12-1982

ஆழமான அறிவு, மற்றவர்களுக்குத் தீங்கு நினையாத தூய உளப்பாங்கு, அன்பாகவும் இனிமையாகவும் பேசும் இயல்பு பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொள்ளாது மனிதப்பண்புடன் தன் தொழிலைச் செய்யும் ஆற்றல் நிறைந்தவர். அவரது ஆத்மா சாந்தியடைவதாக. அன்பு மனைவி இராசலட்சுமி ஆலடி, ஆனைக்கோட்டை.

(C 6051)

## 31-ம் நாள் நினைவஞ்சலி




நாகமுத்து சிவப்பிரகாசம்
(முன்னாள் பங்காளர், செக்கிராவ P சுப்பிரமணியம் சகோதரர்)
(தற்போது அம்டாவில் உரிமையாளர், சண்டிலிப்பாய்)

தோற்றம்: 5- 2- 1918
மறைவு: 3- 11- 1986

மண்ணிலே வளமாய் வாழ்ந்து, இறைபக்தியில் தளராது இருந்து, அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து, பலர் வாழ்வுக்கும் வழிகாட்டியாய் இருந்து உற்றார், உறவினர் உள்ளத்தில் நிலையாய் இருந்து எம்மை விட்டுப் பிரிந்து சென்ற தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். 3- 11- 86 அன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய அழைப்பிலும், மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி, தம்பிமார், தங்கைமார், மைத்துனர்கள்.
சிரணிநாகம்மாள் கோவிலடி, சண்டிலிப்பாய்.

(C 6058)




ஒரு பிரபல்யமான கல்லூரியின் மாணவர்களை ஒரு கல்விமான் அழைத்தார். அவர்கள் மத்தியில் நூற்றுக்கணக்கான பாட நூல்கள் வைக்கப்பட்டிருந்தன. அவர் மாணவர்களைப் பல கேள்விகள் கேட்டுப் புத்தகத்தில் பார்த்து விடைசொல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

அந்நூல்கள் அம்மாணவர்கள் படிக்கும் பல்வேறு பாட நூல்களின் குவியலே! ஆசிரியர்கள் மாத்திரம் வேறுவேறு. கல்விமானின் கேள்விகளுக்குப் புத்தகத்தைப்பார்த்தே விடைதெரியாது மாணவர்கள் தடுமாறினார்கள்!

கேள்விகளுக்கு விடைக்கொத்துக்கொடுத்து எமது கல்வியுலகம் மாணவர்களின் நாற்பயிர்களை அழித்து வருகின்றது. எமது சமுதாயத்திற்கு இது நல்ல சகுனம் அல்ல.

பாணபத்திரன்

## அடிக்கல் நாட்டு விழா

யாழ்ப்பாணம், செவ்.

இருபாலை கிழக்கு பாரதி கலாமன்ற சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நிலையத் தலைவர் செ. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

கலாநிதி வ. கணேசலிங்கம் அடிக்கல் நாட்டு விழாவின் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார். (ஒ)

## மாணவர் நிம்மதி

யாழ்ப்பாணம், செவ்.

வெளிவாரிப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்தப் என்ற பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் முடிவு குறித்துத் தமிழ் மாணவர்கள் மத்தியில் நிம்மதியேற்பட்டுள்ளதாக யாழ் வெளிவாரி மாணவர் ஒன்றியத் தலைவர் திரு க. வாமதேவன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## தென்னை உரம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தென்னை செய்கையாளருக்குத் தேவையான உரவகைகள் கடடைவேலி, நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தினால் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளது. என யாழ். மாவட்ட செயலக உதவி அரச அதிபர் திரு ச. பொ. பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

இளம் கன்றுகளுக்குரிய உரிய [வை. பி எம] காய்க்கும் மரங்களுக்குரிய (சி யு3) உர வகைகள் விற்பனைக்கிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வீதிவேலைப் பொருட்களுக்கான கூறுவிலை அறிவித்தல் 1987

யாழ். மாநகராட்சி மன்றத்திற்கு வீதி வேலைப் பொருட்களான கண்டகல், கிறசர், சல்லிகள், கையினால் உடைத்த சல்லி, மண்வகைகள், ஊரி, கிறசர் தூள், மக்கி, தேங்காய் மட்டை [பெ.ச்சு], கிடுகு சுண்ணாம்பு முதலியவற்றிற்கான கூறுவிலை விநியோகத்தர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

கூறுவிலைகள் யாழ் மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 12- 12- 86ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணி வரை ரூபா 500/- மீளளிக்கப்படும் பிணைப்பணமாகவும், ரூபா 50/- கேள்விப்படிவக் கட்டணமாக செலுத்திப் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். கிடுகு. தேங்காய் மட்டை, சுண்ணாம்பு போன்ற பொருட்களுக்கு பிணைப்பணம் செலுத்தத் தேவையில்லை. ஒவ்வொரு பொருள் விநியோகத்திற்குமான தனித்தனியான படிவங்களில் கூறுவிலை குறிக்கப்பட்டு 16-12-86 ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

கூறுவிலை அனுப்பும் கடித உறை அரக்கு முத்திரையிடப்பட்டு "மராமத்துப்பகுதி வீதி வேலைப்பொருட்களுக்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ். மாநகர மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்.
மராமத்துபகுதி,
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,

[A 3162]

## 1-வது பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் கு. சயந்தன்

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவிலடியைச் சேர்ந்த குகநேசன் சாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சயந்தன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று 2-12-86 அவரது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தாமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார் (நைஜீரியா) தாத்தா குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் பலகலையும் பயின்று நல்லூர் முருகன் அருளால் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

C6121

# "ஊழியர் மீதான தாக்குதலை வன்மையாககண்டிக்கிறோம்"

யாழ்ப்பாணம், செவ்

"யாழ்ப்பாணத்தில் தொலை தொடர்பு திணைக்கள ஊழியர்களும் பொது மகன் ஒருவரும இனவாத இராணுவத்தினரால் மேற்கொளளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினல் படுகாயமடைந்துள்ளனர். பொறுப்பு வாய்ந்த வெகுஜன அமைப்பு என்ற முறையல் இச் செயலை வட பரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு வன்மையாகக் கண்டிக்கின்றது"

'அரசாங்கமும் இராணுவ அதிகாரிகளும் பல வாக்குறுதிகளைக் கொடுப்பதும் அதனைக் காற்றில் பறக்கவிடுவதும சர்வசாதாரணமான நிகழ்ச்சிகளாகி விட்டன. ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயத்திற்குள் இயங்கி வரும் அரச திணைக்களங்கள் பொது சன ஸ்தாபனங்கள் மாத்திரப அல்ல அதற்கு அப்பாலுமுள்ள ஸ்தாபனங்களையும பொதுமக்களையும் அழிக்கும் நோக்குடனேயே இப்படியான இராணுவ நடவடிக்கைகள் தொடருகின்றன என்ற சந்தேகத்திற்கு இடமுண்டு.

'ஊழியர்கள் தங்களது கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் திணைக்களங்களைக் குறி பார்த்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்ப்பதும் அதற்கு போலிக்காரணங்களைக் கூறுவதும் எக்காரணங்களைக் கொண்டும் ஏமாற்றுக் கொள்ளவே முடியாது".

# 30 பிக்குகளுடன் பஸ்ஸில் விஜே யாழ். வருகின்றார்!


(கொழும்பு)

மக்கள் சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு. விஜேகுமாரணதுங்க நாளை புதன்கிழமை பஸ் மூலம் யாழ்ப்பாணத்துக்கு புறப்பட்டு வருவதற்கு திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் சிறை வைக்கப்பட்டுள்ள இரு இலங்கை ராணுவ சிப்பாய்களையும் விடுவித்து அழைத்து செல்வது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்தவே திரு. குமாரணதுங்க யாழ்ப்பாணம் புறப்பட விருப்பதாக கூறப்படுகின்றது.

திரு குமாரணதுங்காவுடன் 30 பௌத்தபிக்குகளும் பஸ்ஸில் வரவிருப்பதாகத் தெரிகின்றது.

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



அரவிந்தன் (ரவி)

ஆண்டவன் படைப்பு: 29-5-1965

ஆண்டவன் அழைப்பு: 2-12-1984

அன்புச் செல்வமே குலவிளக்கே! இருள் சூழ்ந்து இரண்டாண்டாகியும் உன் நினைவு தான் எமக்கு ஒளி விளக்கு. மூத்த மகன் இல்லையென்ற கவலையினை தாய்நாடுவாழுங் கும் அப்பா, அண்ணா உன்னை அம்மா வடாம் என நித்திரையிலும் அழைக்கும் தங்கைமார்

புலிவரும் புலிவரும் ஆமியும் நேவியும தடுமாறும் நிலைவரும், தமிழ் ஈழமே எங்கள் லட்சியமே எனப்பாடும் தம்பிமாரும, எடுத்த கருமத்தை எள்ளளவும் பிசகாமல் செய்துமுடிக்கும் செயல்வீரன், கெட்டிக்காரன் அதிக நாட்கள் வாழ்ந்ததில்லை எனக்கலங்கும அண்ணாவும் போரிலே மாண்டிருந்தால் பொறுத்திருப்பேன் என்மகனே, கூண்டுக் கிளி யாகிப்பூட்டிவைத்த சுட்ட வைர பிணந்தின்னும் பேய்கள், இவர்களை நடுவில் விட்டோட்டும் நாளுக்காய் போராடும் நண்பர்கள், அன்பிலும் பண்பிலும் சிறந்த இளவலையிழந்தோம் எனக் கலங்கும் உறவினர், இத்தனைக்கும் வாழ வேண்டியிருப்பதாலி வாழ்ந்திருக்கும், சாகும் வரை உன் நினைவு சாகாது எனக்கதறும் அம்மாவும்,

இறைவனடியில் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கும்;

அப்பா, அம்மா, சகோதரர், உறவினர், நண்பர்கள்.

கோவில் வாசல், இணுவில். (C 6119)

## வெலிக்கடை சிறையிலிருந்து விடுதலை

யாழ்ப்பாணம், செவ்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த இரண்டரை வருட காலம் வெலிக்கடைச் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மானிப்பாய் சங்குவேலி தெற்கைச் சேர்ந்த மயில்வாகனம் செல்வச்சந்திரன் (வயது 26) கடந்தவாரம் விடுதலையானார்.

1984ம் ஆண்டு திருகோணமலையில் தமது உறவினர் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்ட இவர் போராளிகளைத் தெரிந்திருந்தும் அரச படையினருக்கு தகவல் தெரிவிக்கவில்லை என்ற குற்றத்தின் பேரில் கடந்த இரண்டரை வருடகாலம் தடுத்து வைக்கப்பட்டபின் சென்றவாரம் விடுதலை செய்யப்பட்டார். (சி)

## செம்மலை ம.வி.சாதனை

யாழ்ப்பாணம், செவ்

இவ்வாண்டு நடைபெற்ற க.பொ.த.(உ) பரீட்சையில் செம்மலை மகாவித்தியாலய மாணவர்கள் மிகத்திறமையாகச் சித்தியடைந்து பெரும் சாதனையை நிலை நாட்டியுள்ளனர். 7மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி அனைவருமே சித்தியடைந்துள்ளனர் இவர்களுள் அறுவர் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையைப் பெற்றுள்ளனர்.

இவர்களுள் ஒரு மாணவர் 2 'ஏ'யும், 2 'சீ'யும் பெற்றுச் சித்தியடைந்துள்ளார் முல்லைத்தீவு மாவட்டத்திலே 2 'ஏ'யுடன் சித்தியடைந்த மாணவர் இவ்வித்தியாலயத்தைச் சேர்ந்த சி. பாஸ்கரன் என்பவரே.

இதேவேளை 6ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும் இவ்வித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் தெரியப்பட்டுள்ளனர். (ஒ)

## மக்கள் கஷ்டம்

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி இலங்கைவங்கி மக்கள் வங்கிக் கிளைகள் என்பன வழமையான வேலைகள் எதுவுமின்றி மூடிக்கிடப்பதினால் நகைகளை மீட்கமுடியாது பொதுமக்கள் அவதியடைகின்றனர்.

## குருகுலத்தில் இயங்கும்

கிளிநொச்சி, திங்கள்.

கிளிநொச்சிபகுதி பொதுமக்களின் நன்மை கருதி கண்டாவளையில் தற்போது இயங்கி வரும் உதவி அரசாங்க அதிபர் பணிமனை வாரத்தில் ஒருநாள் கிளிநொச்சி 7ம் வாய்க்காலிலுள்ள குருகுலத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம் திங்

கடந்த ஆண்டு நடைபெற்ற 5ம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய மாணவி செல்வி கோ காஞ்சனா சித்தியடைந்துள்ளார் இவர் இப்பாடசாலையிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் முதன் முறையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது (சி)

## கடத்தப்பட்டனர்

வவனியா செவ்

மரத்தளபாடங்கள் விற்பனையில் ஈடுபட்டுவரும் தென்னிலங்கையைச்சேர்ந்த இருவர் குருமன்காடு என்ற இடத்தில் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளனர்.

## காணமல் போனவர் இராணுவமுகாமில் இருக்கிறார்

வவனியா, திங்கள்.

வயலுக்குப் போனபோது காணமல் போனதாகக் கூறப்படும். வெடிவைத்தகல்லு நாகமணி என்ற 23வயதான வாலிபன் வன்னி ஆயுதப்படை முகாமில் இருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## திறப்புவிழா

யாழ்ப்பாணம் செவ்.

வலிகாமம் கிழக்கு நீர்வேலி ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் 33வது விற்பனை நிலயத் திறப்புவிழா திரு க நமசிவாயம் தலைமையில் நடைபெற்றது

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு.செ.சபாரத்தினம் மங்கள விளக்கேற்றி விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்தார். (ஒ)

## நவபுரம் கிராமத்துக்கு மின்வழங்க ஏற்பாடு

சாவகச்சேரி, திங்கள்

கைதடி நவபுரம் கிராமத்துக்கு மின்சார விநியோகம் செய்வதற்கான ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## தொலைபேசிசேவை சீரானது

வவனியா, திங்கள்.

கடந்த ஒருமாதத்திற்கு மேலாக செயலிழந்து இருந்த வவனியா-யாழ்ப்பாணம் தொலைபேசி சேவை இயங்க ஆரம்பித்துள்ளது. [இ]

## வெங்காய செய்கை பெரும் நஷ்டம்

ஊர்காவற்றுறை, திங்கள்.

தீவுப்பகுதிக்கு கடந்த வருடங்களிலும்பார்க்க கூடுதலாக இந்தவருடம் வெங்காயச் செய்கை மேற்கொண்டுள்ளார்கள் இந்தமுறை மாரிமழை இதுவரை பெய்யாததினால் வெங்காயப்பயிர்கள் கருகி பலருக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

## புங்குடுதீவில் இலவச உணவுவகைகளை வழங்கும் பொது ஸ்தாபனங்கள்

புங்குடுதீவு, திங்கள்

பேருட், றெட்பானா சர்வோதய இயக்கத்தினால் போஷாக்கில்லாத குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப்பெண்கள், பாலூட்டும் பெண்கள் ஆகியோரின் நன்மைகருதி வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் பால், கஞ்சி, பயறுவகை உணவுப் பண்டங்கள் புங்குடுதீவு பகுதிக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் இவ்வகையான உணவுகளை ஒரு நேரமாக கொடுத்து வந்த இவ் ஸ்தாபனங்கள் தற்போது காலை, மாலை ஆகிய இரண்டு நேரங்களிலும் வழங்கிவருகின்றன

இந்த உணவுகளை வழங்குவதற்கு கிராமங்களில் உள்ள பெண்மணிகள் பலர் இந்நிறுவனங்களில் சேவையாற்றிவருகின்றனர்.

இந்த நிலையங்கள் புங்குடுதீவின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. குறிகாட்டுவான், கம்பிலியன், நுணுக்கல் மணகாடு போன்ற நிலையங்களில் அதற்காக நியமிக்கப்பட்டுள்ள யுவதிகள் செயலாற்றி வருகின்றார்கள்.

## நீதிமன்றுக்கு 'டிமிக்கி' பலருக்கு தண்டனை

வல்வெட்டித்துறை, திங்கள்

பணத்தை வைத்துக் கொண்டே செலுத்தப்பட வேண்டிய தொகையை செலுத்துவதற்கு நீதிமன்றில் சாககுபோக்கு காட்டியவர்கள் புலிகளின் பிரதேச பொறுப்பாளரிடம் பொலிகை கிராம நீதிமன்றின் விசாரணைக்குழு ஒப்படைத்ததைத்தொடர்ந்து அவர்கள் நீதிமன்றில் மறித்து வைக்கப்பட்டனர். அவர்களுக்கு உயவர்கள் வந்து உரிய பணத்தைச் செலுத்தி அவர்களை மீட்டுச் சென்றனர்

நடலகாலமாக ஒருவருக்கு கூடுதல் தொகைப் பணத்தை செலுத்தவேண்டிய ஒருவர் டிமிக்கி கொடுத்துவந்ததால், வாமீ பொலிகை கிராம நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இரு மாதங்களின் முன்னர் தவணைக்கு 1000/- ரூபா வீதம் கட்ட வேண்டுமென உத்தரவிடப்பட்டது. ஆனல் அவர் பல தவணைகள் வராமலும், சாக்குப் போக்கும் காட்டிவந்தார். இதனை கண்காணித்த விசாரணையாளர்கள் இவரை புலிகளின் பிரதேச பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து அத்தொகை செலுத்தப்பட்டது.

இதேபோன்று நீதிமன்றை அவமதித்து அறிவித்தலுமின்றி தவணைகளுக்கு வராத ஒரு பெண் குற்றப்பணத்தைச் செலுத்த சாக்குப்போக்கு காட்டியமைக்காக பிரதேச பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் அத்தண்டப் பணம் செலுத்தப்பட்டது.

நீதிமன்றில மதிப்பற்றதனமாக நடப்பவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும் என எச்சரிக்கையும் செய்யப்பட்டது.

## இல்ல விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி திங்கள்

மட்டுவில் தெற்கு சோமஸ்கந்தா அறவழி பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இம்மாதம் 7ம் திகதி சோமஸ்கந்தா சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஒ)

## போராளிகளுக்கு உதவவேண்டும்

(கிளிநொச்சி நிருபர்)

இன்றைய போராட்ட சூழ்நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் கடமையாற்றும் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் போராட்டங்களில் கலந்து கொள்ளவேண்டும். புரிந்துணர்வுடன் போராளிகளுக்கு சகலவிதத்திலும் உதவமுன்வர வேண்டும்"

இவ்வாறு கிளிநொச்சியில் நடைபெற்ற பொதுமக்கள் பிரதிநிதிகள் கூட்டத்தில் உரையாற்றுகையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கிளிநொச்சிப் பிராந்திய அமைப்பாளரும், பொறுப்பாளருமாகிய திரு. மூர்த்தி கூறினர்.

## அரச ஊழியர்கட்கு அடையாள அட்டை

மன்னர் திங்கள்

மன்னர் மாவட்டத்திலுள்ள சகல அரச ஊழியர்களுக்கும் மன்னர் அரசாங்க அதிபர் திரு எம். எம். மக்பூலினல் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

## மரக்காலை முதலாளி தடுப்புக்காவலில்

வவனியா திங்கள்

வவனியா வேப்பங்குளம் மரக்காலை முதலாளி எஸ் சிவனேசன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு வன்னி முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (சி)

## 22 வது சிராத்த தினம்

யாழ்ப்பாணம், செவ்,

கூட்டுறவுத் தந்தை அமரர் வீரசிங்கத்தின் 22 வது சிராத்த தினத்தை இம்மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை அனுஷ்டிப்பதற்கு யாழ் தேசிய கூட்டுறவுச் சபை ஒழுங்கு செய்துள்ளது.

யாழ். கடற்கரை வீதியில் உள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தில் இச்சிராத்த தினம் நடைபெறவுள்ளது. [வா]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
2-12 86 செவ்வாய்க்கிழமை

## 'ஹெலி' சுற்றியதால் பீதி

சுண்டிக்குளி, திங்கள்

யாழ். மையசெயலகத்தை சுற்றி ஹெலிகொப்டரொன்று நேற்று நண்பகல் மூன்று நான்கு தடவை வட்டமிட்டது.

இதனால் செயலகத்தில் பணி புரியும் ஊழியர்கள் மத்தியிலும் பொதுமக்களிடையேயும் பெரும் பீதியும் பரபரப்பும் ஏற்பட்டது. (ஊ)

# இந்தியாவுக்காக ஜனாதிபதியின் விஜயத்தை சோவியத் ரத்துச்செய்ததா?

## -சபையில் அனுரா கேள்வி

கொழும்பு, திங்கள்

"ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் சோவியத் விஜயம் இறுதி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டது. இவ்விஜயத்தை இடம் பெறச் செய்யவேண்டாமென சோவியத் யூனியனை இந்தியா கேட்டுக்கொண்டதாக நான் அறிகிறேன். ஆனால் ஏன் அவ் விஜயம் நிறுத்தப்பட்டது?"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா கடந்த வெள்ளி யன்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

வெளியுறவு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்தார்

அவர் மேலும் உரையாற்றுகையில், "சுதந்திரக் கட்சி அரசு தனது அங்கத்தவர்களின் உறவினர்களுக்கு ராஜதந்திர பதவிகள் அளித்தது எனக் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் இப்போது அமைச்சர் காமினி திஸநாயக்காவின் மைத்துனர் கலாநிதி விக்கிரம வீரசூரியவுக்கு அவுஸ்திரேலியத் தூதுவர் பதவி அளிக்கப்பட்டுள்ளது" என்றார்.

### இஸ்ரேல் ஜனாதிபதி விஜயம்

இஸ்ரேல் ஜனாதிபதி ஹேர்ஸோக்கின் கொழும்பு விஜயம் பற்றித் திரு. பண்டாரநாயக்கா குறிப்பிடுகையில், இவருடைய விஜயத்தினால் பயனேதும் விளைந்ததா? எனக் கேட்டார்.

"ஜனாதிபதி ஹேர்ஸோக்கின் ஆசிய விஜயம் பல குழப்பங்களை விளைவித்துச் சென்றுள்ளது. அவரது விஜயத்தைப் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் ரத்துச் செய்தது. அந்நாட்டு மூஸ்லிம் கிளர்ச்சியாளருடன் பிலிப்பைன்ஸ் அரசு பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்ததே அதற்குக் காரணம். இவரது கொழும்பு விஜயம் இந்தியாவுக்கு திருப்தியளிக்கவில்லை. அதனால் அது தனது அதிருப்தியை லங்கைக்கான தூதுவர் மூலம் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியது. அத்துடன் ஈரான், ஈராக், பலஸ்தீன விடுதலை இயக்க பிரதிநிதிகள் தூதரகங்களின் பிரதிநிதிகளும் எமது வெளியுறவு அமைச்சரைச் சந்தித்து இஸ்ரேல் ஜனாதிபதியின் விஜயம் குறித்துத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தன"

இவ்வாறு அநுரா மேலும் கூறினார். (ஊ)

## நேர்முகப் பரீட்சை நுவரேலியாவில்

சுண்டுக்குளி, திங்கள்

ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த வடபகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கும், யுவதிகளுக்குமான நேர்முகப் பரீட்சை நுவரேலியாவில் நடத்தப்படவுள்ளதாக கல்வித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சை இம்மாதம் 30-ம் திகதி நடைபெறவுள்ளதுடன், சம்பந்தப்பட்டவர்களுக்கு இதற்கான அழைப்பும் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## சிறுவனுக்கு எச்சரிக்கை

வல்வெட்டித்துறை, திங்கள்

தந்தைக்காக நீதிமன்றத்துக்கு மன்னிப்புக் கடிதம் கொண்டுவந்த பதினைந்து வயதுச் சிறுவன் அந்நீதிமன்ற நீதிபதியால் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் அறிவுரையும் வழங்கப்பட்டார்.

இச்சம்பவம் பொலிகண்டி கிராம நீதிமன்று ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

தீர்ப்புப்படி கட்டவேண்டிய பணத்தை நீதிமன்றில் கட்ட முடியாத தந்தை ஒருவரே தாம் வரமுடியாத நிலையில் இருப்பதாக தெரிவித்து மகன் மூலம் மன்னிப்புக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். (ரா)

# நிறை, தரம் குறைந்த பாண் உற்பத்தியாளருக்கு ஐந்நூறு ரூபா அபராதம்!

யாழ்ப்பாணம், செவ்

ஒரு இறாத்தல் பாணின் நிறை 380 கிராமுக்கு கூடுதலாகவும் தரமுள்ளதாகவும் இருக்க வேண்டும் இதனை மீறும் பாண் உற்பத்தியாளர்களுக்கு 500 ரூபா வுக்கு மேற்பட்ட அபராதமும் நிறை குறைந்த பாணை விற்பனை செய்யும் கடை உரிமையாளருக்கு 100 ரூபா அபராதமும், விதிப்பதெனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவக்குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினருக்கும் விடுதலைப் புலிகளின் மருத்துவக் குழுவினருக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஏகமனதாக இம்முடிவு எடுக்கப்பட்டது.

மருத்துவக்குழு பொறுப்பாளர் திரு தீச [illegible] சிறுகுறிந்த [illegible] காரணப்படுவதால் நிர்வாகங்கள் [illegible] நடை [illegible] ஒழுங்கினை மேற்கொள்வதற்காக சில சட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதாக கூறினார்.

இக்கருத்தரங்கில் கீழ்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது

பாண் சேர்வைப்பொருட்களின் விலைஏற்றத்த லும் வறகு போன்ற பலபிரச்னையாலும் பேக்கரி உரிமையாளர்களும் நிறைப்பிரச்னை சுகாதார கெடுதிகள் போன்ற பிரச்னைகளால் பாவனையாளர் பாதிக்காமலிருப்பதற்காகவும் ஒரு பாணின் நிறை 380 கிராமுக்கு கூடுதலாகவும் தரமுள்ளதாகவும் இருக்கவேண்டுமென இரு பகுதியினருக்குமிடையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

விரைவில் விறகுவிநியோகம் சீராக நடைபெற தாங்கள் ஆவனசெய்வதாக கூறப்பட்டது.

சுகாதார சீர்கேடுகள் சம்பந்தமாக கண்டுபிடிக்குமிடத்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எந்நேரமும் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது

சங்கம் தனது தீர்மானத்தில் பாண்விற்பனை செய்யும் எந்தவொரு கடைக்கும் ஒரு பாணிற்கு 15 சதம் கமிஷன் போட்டுக் கொடுக்க வேண்டுமெனவும் (2 95 சதம்) தீர்மானிக்கப்பட்டது. 2 95 சதத்தையே கடை உரிமையாளர் பெறவேண்டுமெனவும், 380 கிராமுக்குகுறைவான பாணை எந்தவொரு பேக்கரி உரிமையாளர்களும் கடைகளுக்கு விநியோகிக்க வேண்டாமெனவும் இதை மீறும் பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் விதியை மீறியதாக கருதப்படுவார்களெனவும் தீர்மானிக்கப்பட்டது. [இ]

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி மயில்வாகனம்

தொண்டமானாற்றைச் சேர்ந்த நல்லதம்பி மயில்வாகனம் (Retired Asst Commissioner of Labour) 29-11-86ல் அகால மரணமடைந்தார். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் தம்பையா நல்லதம்பியின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், டாக்டர் பிரேமாவதி U K], சிவானந்தா [தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறை] உமாவதி [முன்னாள் ஆசிரியை - தற்போது U K] குகானந்தா [Queensland University Australia] ஆகியோரின் அன்புத்தந்தையும் டாக்டர் தெய்வேந்திரா [U K], வத்சலாதேவி ஆகியோரின் அருமை மாமனாரும் மயூரன், மாயவன், தர்சனா, சேந்தன், சுபாஜினி ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் [உடுப்பிட்டியில்] 29-11-86ல் நடைபெற்றது. தகவல்: ம. சிவானந்தா.

C 6126

### திருமதி செல்லம் தங்கராசா

திருநெல்வேலியைச் சேர்ந்த தங்கராசாவின் அன்பு மனைவி செல்லம் காலமாகிவிட்டார். இவர், தனேஸ்வரி, இந்திராதேவி காலஞ்சென்ற தவமணிதேவி, பத்மினிதேவி, முத்துக்குமார் [பிரான்ஸ்] தர்மராஜா, ஜெயன், ஆனந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரட்ணம், சிவானந்தன், கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், யாழினி, றமேஷ், நரேஷ் துஷி ஆகியோரின் அன்புப் பேத்தியும், சுந்தரன், வியாழக்கு, கனகரத்தினம், வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-12 86 புதன்கிழமை காலை 10-00 மணியளவில் திருநெல்வேலியில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தர்மராஜா (தறூமு)
தேங்காய் வியாபாரி, அம்மன்வீதி,
திருநெல்வேலி.

[C 6124]

### திருமதி வை. தங்கமலர்

திருமதி வை. தங்கமலர் காலமானார். அன்னார் காலஞ்சென்ற (பட்டடை) சின்னத்தம்பி அன்னலட்சுமி ஆகியோரின் அன்புமகளும், ஓய்வுபெற்ற மாநகரசபை ஓவசியர் வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், சாந்திகுமார் சீமெந்துக்கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), ராஜ்குமார், சுரேஸ்குமார் (டென்மார்க்)ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயமணி, கனகசபசன் (சத்தி-கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசரட்ணம் (கொழும்பு மோட்டார் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் மைத்துனியும், மனோசாந்திக்குமாரின் மாமியாரும், பிருதினி (யாழ் பல்கலைக்கழகம்)யின் பெரிய தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 2-12 86 (இன்று) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2-00 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செ. வைத்திலிங்கம்,
உடையார் லேன், கொக்குவில் கிழக்கு.

[C-6128)

## வவனியா, அநுராதபுரம் முகாம்களில் 41 பேர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

ஒட்டுசுட்டான், திங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வாரம் ஊரடங்குச்சட்டம் அமுலிலிருந்த வேளையில் தண்ணீரூற்று முள்ளியவளை, குமுழமுனை ஆகிய இடங்களில் கைது செய்யப்பட்டவர்களில் 41 பேர் வவனியா, அநுராதபுரம் இராணுவ முகாம்களுக்கு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர். ஏனையோர் விடுதலை செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் முப்பதுக்கு மேற்பட்டோர் திருமணமானவர்களென்றும், ஏனையோர் வாலிபர்களென்றும் தெரிவிக்கப்படுகின்றது

கைது செய்யப்பட்டவர்களின் மனைவிமாரும், தாய், தந்தையரும் இதுசம்பந்தமாக முல்லைத்தீவு அரச அதிபருக்கும், முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுவுக்கும் முறையிட்டுள்ளதுடன், அரசாங்க அதிபரிடம் அத்தாட்சிக் கடிதங்கள் பெற்றுக்கொண்டு பலர் முகாம்களுக்குச் சென்றுள்ளனர். [வா]

## காணாமல்போன விஜிதரனை

# தேடும் முயற்சியை தீவிரப்படுத்துக!

## துணைவேந்தர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

காணாமல் போயுள்ள பல்கலைக்கழக மாணவர் விஜிதரனைத் தேடுவதில் அக்கறை கொண்டுள்ளவர்களைத் துரிதமாக இம்முயற்சியில் ஈடுபடும்படியும் மாணவர்கள் விரிவுரை வகுப்புகளுக்கு திரும்பும் சூழ்நிலையை விரைவாக ஏற்படுத்தித் தருவதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கும்படியும் யாழ. பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்:

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் அதனைக் கைவிட்டமையை வரவேற்றுள்ள துணைவேந்தர் இப்பிரச்னையை ஒரு சுமுகமான முடிவுக்குக் காண்டுவருவதற்காக பல்கலைக்கழகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பாடுபட்ட அனைவருக்கும் நன்றியும் தெரிவித்துள்ளார். (ஆ)

## 11 பொலிஸாரின் நிலைமை கவலைக்கிடம்

கொழும்பு, திங்கள்

ஹொரவப்பொத்தானை தியத்தவெவ என்னுமிடத்தில் கடந்த சனிக்கிழமை தமிழ் போராளிகளின் திடீர் தாக்குதலில் காயமடைந்த பதினொரு பொலிசாரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதென தெரியவருகிறது

இத்தாக்குதலின்போது இரண்டு பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டது தெரிந்ததே. படுகாயமடைந்த பதினொரு பொலிசார் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126